
# இதயம்

ஆசிரியர்: சி. மகேஸ்வரன்

ஐ. சாந்தன்
எழுதும்
சிறுகதை
"THE PROFESSIONAL"
33-ம் பக்கம்



யூன் 1971

சதம் 45

J. M. J.

# ரோமா ஸ்ரோர்ஸ்

புடவை வியாபாரம்

றெடிமேட் & ரெயிலறிங்

வாட் நம். 11, புங்குடுதீவு

எங்களிடம்

றெடிமேட்ஸ்

உடுப்பு வகைகள்

சாறிகள், சேட்டிங்

சூட்டிங்குகள்

மற்றும்

ஏனைய பிடவைகளும்

சகாய விலையில்

கிடைக்கும்.



# ROMA STORES

Prop: V. ROMAPALA

*Ward No. 11,* PUNKUDUTIVU.

உங்கள் உணவுத் தேவைக்குரிய
மிகச் சிறந்த கோழிகளையும், முட்டைகளையும்
தேர்ந்தெடுங்கள்

தொடர்பு கொள்ளுங்கள்



# அன்னை பவுல்ரி ஃபாம்


அத்துரு கிரிய

தொலைபேசி இல; 233

# Annai Poultry Farm

Dealers in CHICKS & EGGS
*(Prop:* **M. RAMASAMY)**
212/B, Pore, ATURUGIRIYA.

***Phone: 233***




உயர்தர பாத அணிகளுக்கு

# “பாலன்ஸ்”

✣ சூட்கேஸ்

✣ ட்ரவெலிங் பாக்ஸ்

இவைபோன்ற பயண உபகரணங்களையும்
பெற்றுக் கொள்ள விஜயம் செய்யுங்கள்.

## ‘பா ல ன் ஸ்’

36, பேஸ்லைன் ரேட், பொரளை.

**BALANS**

36, Baseline Road,
BORELLA.

# போற்றுதல்

திக்குவல்லை-கமால்

பாம்பு, பூரான், தேள்களே!
உங்களை
நான்மிகப் போற்றுதல் செய்வேன்!
தேடி வந்தெமைத் தீண்டி,
விஷத்தைச் செலுத்த வந்தபோதிலும்
உங்களை
நான்மிகப் போற்றுதல் செய்வேன்

மனித உருவம் ஏந்தி,
சிரித்துக் கதைத்து
நெஞ்சம் கலந்ததாய் நெருங்கிப் பழகி
சிறிதும் நினைக்க இயலாவிதத்தில்
தீண்டி....
விஷத்தைச் செலுத்தி
எண்ணற்றபல இன்னல்களைத்தரும்
மனிதப் பாம்பு, பூரான், தேள்கள்
இந்தச் சமுதாயத்தில்
மலிந்திருக்கின்றன,
அறிந்துகொள்ள இயலாவிதத்தில்
நிறைந்திருக்கின்றன!

ஆனால் உங்களை-
ஒருகணப் பொழுதுக்கு முன்பே ஆயினும்
தேடி வந்தெமைத் தீண்டி,
விஷத்தைச் செலுத்த வந்த போதிலும்
அறிந்து கொள்ளுதல் கூடுமே!
ஆதலால்
பாம்பு, பூரான், தேள்களே!
உங்களை
நான்மிசப் போற்றுதல் செய்வேன்.

# இலக்கியத்தில் எஸ்.பொ.வின் போக்கு

— மு. தளையசிங்கம்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

விழுர்த்த பாட்டாளி வர்க்கத்தின் ஆற்றல் இலக்கியப் புலமை தான் முற்போக்கு இலக்கிய இயக்கத்துக்குத் தலைமை தாங்கவேண்டு மென்பது அதேவகை ஆற்றல் இலக்கியப் புலமைதான் அந்த இலக்கிய இயக்சத்துக்கு விமர்சனரீதியாகவும் தலைமை தாங்கி வழிகாட்டவேண்டும் என்ற வகையில் அழுத்தப்படலாமா?

ஏற்கனவே எழுப்பி பதிலளிக்காமல் வீட்ட இந்தக் கேள்விக்கு இனி பதிலளிக்கலாம்.

பாட்டாளிவர்க்கத்தின் அரசியல் இயக்கத்துக்கும் சரி இலக்கிய இயக்கத்துக்கும் சரி பாட்டாளி வர்க்கத்தினர்தான் தலைமை தாங்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. குறிப்பாக இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் பாட்டாளிவர்க்கத்தினரே தலைமை தாங்க முடியாது என்பதைத்தான் சரித்திரம் நிரூபித்துள்ளது. மார்ச்ஸ், எங்கல்ஸ், லெனின் ஆகியோர் முதலாளித்துவ அறிவாளிவர்க்கத்திலிருந்து வந்த முற்போக்குவாதிகளேதான். விஞ்ஞானரீதியான சோஸலிஸ வியாக்கியானத்துச்குரிய கல்வி அறிவும் பக்குவமும் முதலாளித்துவ மத்தியதர வகுப்பில் உதித்த முற்போச்குச் சிந்தனையாளர்களிடமே ஆரப்பத்தில் காணப்படும். அவற்றைப் பாட்டாளி வர்க்கத்துக்கு ர்ய இயச்சம் பூரணமாகப் பயன்படுத்தியேயாகவேண்டும். ஓர் நாட்டில் பாட்டாளிவர்க்கம் இருந்துவிட்டால் மட்டும் அதன் புரட்சி இயச்சம் வென்றுவிடுமென்றுமில்லை; தோன்றிவிடுமென்றுமில்லை. அதற்குரிய விஞ்ஞானரீதியான தத்துவப்பார்வையும் அதனடிப்படையான வியாச்கியானத்துக்கும் செயலுக்குமுரிய அறிஞர்களும் முதலில் அவசியம். அத்தகைய அறிஞர்களைச் சமூகவரலாற்றின் காரணமாக ஆரம்பகாலத்தில் பாட்டாளிவர்க்கம் முதலாளித்துவ மத்தியதரவர்க்கத்திடமிருந்தே பெரும்பாலும் பெறவேண்டியிருக்கிறது. சமூகத்தின் கீழ் நிலையிலுள்ள பாட்டாளிவர்க்கம் அதன் ஆரம்ப வளர்ச்சிக் காலத்தில் தன் வர்க்கத்தினரிடமிருந்தே போதிய அளவுக்கு அறிஞர்களை உருவாக்கக்கூடிய வசதியற்றிருட்பதே அதற்

குக் காரணமாகும். விஞ்ஞானத்தின் வாகனம் பாட்டாளிவர்க்கமல்ல, இன்றைய முதலாளித்துவத்தின் முற்போக்கு அறிவாளி வர்க்கமேதான் என்ற கோட்ஸ்கியின் கூற்றை ஞாபகமூட்டி லெனின் இதை அழுத்தம் திருத்தமாக விளக்கியுமுள்ளார்.

அந்த வகையில் யாழ்ப்பாணத்துப் பாட்டாளிவர்க்கம் அதன் இலக்கிய இயக்கத்தின் தலைமையை முதலாளித்துவ மத்தியதர வர்க்கத்திலிருந்து வந்த ''முற்போக்கு'' விமர்சகர்களிடம் ஒப்படைத்ததில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை: அவர்களைவிடச் சிறந்தவர்களைக் கண்டுபிடிக்காதவரைக்கும், தானே உருவாக்காதவரைக்கும், அவர்களைத் தூவானத்துக்காக ஒதுங்கியவர்கள் என்று ஒதுக்குவது முற்போக்கு இயக்கத்தை முறியடிப்பதகாவே இருக்கும்.

பொன்னுத்துரை இவற்றை அறிந்திருப்பாதாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணப் பாட்டாளி வர்க்கத்து எழுத்தாளர்களிடம் இலக்கிய ஆற்றல் அன்றும்சரி இன்றும்சரி இல்லை என்று கூறுபவர் அதேவகையில் விஞ்ஞானரீதியான சோஸலிஸச் சித்தாந்த வியாக்கியானத்துக்கும் புரட்சி இயக்கத்தின் இலக்கிய விமர்சனத்துக்கும் அவர்கள் தகுதியற்றவர்களாகவே ஆரம்பத்தில் இருந்தார்கள் என்பதைச் சிந்திக்க மறுக்கிறார். அவ்வாறு மறுத்து ஆற்றல் இலக்கியப் பாட்டாளிவர்க்க எழுத்தாளர்களிடமே விமர்சனத்தையும் வழிகாட்டலையும் ஒப்படைக்கவேண்டுமென்று அவர் அழுத்தும்போது இரண்டுவகையான மாருட்டங்களைச் செய்கிறார்; 60க்குப்பின் வந்த இந்த 70 களில்கூட அந்த மாருட்டங்களையே தனது விமர்சனக் கண்டுபிடிப்புகளாகத் தருகிறார்.

ஒன்று, பாட்டாளியாய் இருப்பவன் புரட்சிச் சிந்தாந்தவாதியாகவும் இருப்பான் என்பது. அது தவறு. கற்பனுவாதத்தில் ஊறிய தமிழர்கள் பெரும்பாலும் சமதர்மம், சோஸலிஸம் என்பவற்றை அப்படி மாருட்டம் செய்வதுண்டு. எத்தொழிலைச் செய்தாலும் எல்லாருக்கும் சம அந்தஸ்து, சம உரிமைகள் என்ற கொள்கைக்கு எல்லாராலும் எத் தொழிலையும் செய்யலாம் என்ற அர்த்தமில்லை. பாட்டாளிவர்க்கத்தினரே இலக்கிய இயக்கத்துக்கும் (அதன் ஆரம்பகாலத்தில்) விமர்சனரீதியாகத் தலைமை தாங்கவேண்டும் என்று பொன்னுத்துரை வாதாடும்போது அதே வகையான மாருட்டத்தையே செய்கிறார்.

இரண்டாவது மாருட்டம் ஆற்றல் இலக்கிய எழுத்தாளரே விமர்சகனுகவும் இருக்க வேண்டுமென்பது.

சித்தாந்தத்துறையிலும் இலக்கிய விமர்சனத்துறையிலும் இந்த இரண்டு மாருட்டங்களையும் காட்டும் எஸ். பொன்னுத்துரை தர்க்கவியல் படித்த ஓர் பட்டதாரியாகவும் ஆற்றல் இலக்கியத் திறமையுடையவராகவும் பாட்டாளிவர்க்கத்தைச் சேர்ந்தவராகவும் இருக்

கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அவரது மாருட்டங்கள் ஆற்றல் இலக்கியத்துக்கும், சோஸலிஸ சித்தாந்த வளர்ச்சிக்கும், இலக்கிய விமர்சனத்துக்கும், பாட்டாளிவர்க்கத்துக்கும் அதன் புரட்சி இயக்கத்துக்கும் ஆபத்தை விளைவிக்கக்கூடியவையாகவே இருக்கின்றன. எஸ். பொ. நடத்த முயன்ற புரட்சியின் சோகக் கதை அதுதான்.

இந்தச் சோகக்கதைக்குக் காரணமாக இரண்டு காரணங்களைக் காட்டலாம்.

பாட்டாளிவர்க்க ஆற்றல் இலக்கியக்காரனான எஸ். பொன்னுத்துரைக்கு இந்த விசயங்களின் தாற்பரியம் விளங்கவில்லை என்பது ஒன்று.

ஆனால் அதைவிட முக்கியமானது அடுத்தது. பொன்னுத்துரை தன் வர்க்கத்தையும் அதன் புரட்சி இயக்கத்தையும் விடத் தன்னைப் பெரிதாகக் கருதுவதே அது.

இலக்கிய ஆற்றலை அடிப்படையாக வைத்து இலக்கியத்துக்கே ஆபத்து விளைவிக்கக்கூடிய ஓர் விமர்சன அளவு கோலைப் போடுவதும் பாட்டாளி வர்க்கம், புரட்சி இயக்கம் ஆகிய காரணங்களைக் காட்டி அதே பாட்டாளி வர்க்கத்துக்கும் புரட்சி இயக்கத்துக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடிய மாருட்டங்களை கோட்பாடுகளாகப் போடுடுவதும் எஸ், பொன்னுத்துரை என்ற ஒரு தனி மனிதனைப் பெரிதாக்குவதற்குத்தான். பொன்னுத்துரைக்குத் தெரிந்த தர்க்கவியல் பெரும்பாலும் ''நான்'' னுக்குரிய தர்க்கவியலாகவே இருக்கிறது. இயக்கத்துக்கும் வர்க்கத்துக்குமாக ''நான்'' னைத் தியாகம் செய்யாமல் அவற்றுக்கெதிராக, அவற்றையும் விடப் பெரிதாக்குவதற்காக அந்த 'நான்'னை அழுத்துவதுதான் பொன்னுத்துரையின் ஞான போதனையாக இருக்கிறது. ஓர் முற்போக்கு இயக்கத்துக்குத் தலைமை தாங்க விரும்புபவன் எந்தளவுக்குச் சதா தன்னையே சுய விசாரணை செய்ய வேண்டியவனாய் இருக்கிறான் என்பதைப் பொன்னுத்துரையின் தர்க்க மாருட்டங்கள் தெரிவிக்கின்றன. சுய விசாரணையற்றுத் தன்னையே அழுத்தும் தற்குறிகளும் குதர்க்கவாதிகளுந்தான் ஓர் முற்போக்கு இயக்கத்தின் முதல் எதிரிகளாவர்.

பொன்னுத்துரைக்கு எதிராக முற்போக்கு இலக்கிய இயக்கம் காட்டக்கூடிய குற்றச்சாட்டுக்கள் இவையேதான். ''கம்யூனிஸ்ட் எழுத்தாளரும் ஈழத்தமிழ் இலக்கியமும்'' என்னும் தனது அண்மைக் காலக் கட்டுரைமூலம் பொன்னுத்துரை தானே வலிந்து இக்குற்றச்சாட்டுக்களுக்குத் திரும்பவும் இலக்காகியுள்ளார்.

இவற்றுக்கெதிராகப் பொன்னுத்துரை தனது தகுதியை நிரூபிக்கவேண்டுமானால் அவர் வேறு பலவற்றை நிரூபிக்கவேண்டியவ

ராய் இருக்கிறார். பொன்னுத்துரையின் வசதிக்காக அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்திக் கூறலாம்.

பொன்னுத்துரை வகுத்த இலக்கியக் கொள்கை ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு கம்யூனிஸ்ட் இயக்கத்தைவிட அதிகம் உதவியிருக்கிறதா? இனிமேலாவது உதவக்கூடியதாகக் காட்டுகிறதா?

அந்த உதவி, கம்யூனிஸ்ட் இயக்கத்தினர் சாதித்ததைவிட தன்னளவுக்கு அதே கம்யூனிஸ்ட் பார்வைக்கு மக்களை ஈர்த்துள்ளதா?

அவரும் அவரது விமர்சனப் பார்வையும் இல்லாமல் கம்யூனிஸ்ட் இயக்கம் நட்டமடைந்திருக்கிறதா? அவர் எதிர்த்த விமர்சகர்களைவிட அவர் அதே துறையில் ஏதாவது சாதித்துள்ளாரா?

''நற்போக்கு'' இலக்கியவாதம் தமிழர்களின் கலை இலக்கியத்துக்குமட்டுமல்ல; அவர்களின் அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சிக்கும் விழிப்புக்கும் முற்போக்கு இலக்கியப் பார்வையை விட உதவியிருக்கிறதா? உதவக்கூடியதாய் இருக்கிறதா?

இவற்றுக்கும் இவற்றைப்போன்ற வேறுபலவற்றுக்கும் எஸ். பொன்னுத்துரை ஆழமான விளக்கங்கள் தரவேண்டியவராய் இருக்கிறார். தனது விமர்சனத் தகுதியை நிலைநாட்ட விரும்பும் அவர் இவைபற்றிய ஆழமான விமர்சனங்களைத் தராமல் வெறும் மாறாட்டங்களைக் காட்டி வாசகர்களையும் இளம் எழுத்தாளர்களையும் மாறாட்டம் செய்யக்கூடாது.

என்னைப் பொறுத்தவரையில் மார்க்சீய முற்போக்கு இலக்கிய இயக்கத்துக்காக வாதாடுவது எனது நோக்கமல்ல. அதற்கு அப்பால் செல்லும் ஓர் சீரான கலை, இலக்கிய, சமூக, பொருளாதார அரசியல், ஆத்மீகப் பார்வையைக் காட்டுவதே எனது இலட்சியமாகும். பூரண சர்வோதயம் என்று அதைக் குறிப்பிட விரும்புகிறேன். நமது ஈழத்துத் தமிழ் இலக்கியப்போக்கை அந்தத் திசையில் திருப்பும் நோக்கத்துடனேயே இங்கு பொன்னுத்துரையையும் ஆராயமுயன்றுள்ளேன். ''மார்க்சீய முற்போக்கு'' இயக்கத்துக்கு அப்பால் செல்லவேண்டுமானால், அதேசமயம் அதே பணியைச் செய்வதாகக் காட்டிக்கொள்ளும் சில மாரீசஇயக்கங்களையும் முயற்சிகளையும் புட்டுக்காட்ட வேண்டியிருக்கிறது. எஸ். பொன்னுத்துரையின் பல உருவக்கிரியைகள், மரபுபற்றிய அவரது கருத்துக்கள், ''நற்போக்கு'' என்ற இயக்கம் எல்லாம் அத்தகைய மாரீசத் தடைகளேதான். அவற்றைப்பற்றி வேறு தனிக் கட்டுரைகளில் ஆராய்ந்தபின்பே ''முற்போக்கு'' விமர்சகர்களைக் தொடவேண்டும் என்று நினைத்துள்ளேன்.

முற்றும்.

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

சுவை மிகுந்த உணவு வகைகளுக்கு

# 'கண்ணகி பவான்'

உரிமை: நா. கந்தசாமி

173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான எந்த நகைகளும்
ஓடர் நக்கு செய்து கொடுக்கப்படும்.
எங்களிடம் சிறந்த இரத்தினக் கற்களும் மலிவாகப்
பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு கொள்ளுங்கள்

*WIJESIRI JEWELLERS.*

Prop; P. WIJESIRI.

*151, Kasturiar Road,* JAFFNA.

# இலக்கிய எழுத்துக்களில் ஆபாசம்

— மு. நேமிநாதன்

( சென்ற இதழ் தொடர்ச்சி )

1933ல் அமெரிக்காவில் ஜேம்ஸ் ஜொய்சின் யுலிசெஸிற்கு (ulyssess) விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டபோது ஆபாசத்திற்குப் புதிய இலக்கணம் கூறப்பட்டது. இதே வேளையில் இன்னொரு உண்மையையும் நாம் கவனிக்கவேண்டும். யுலிசெஸ் கதையைப் படிக்கும் கிழக்கத்தையவன் நிச்சயமாக அதனைத் தடைசெய்ய வேண்டுமென்றே கூறுவான். அவனது மனம் முழுக்க முழுக்க அப்படிச் சொல்லும். இதற்குரிய பிரதான காரணம் கிழக்கத்தையவனின் வித்தியாசமான பண்பாடும் கலாச்சாரமுமே. யுலிசெஸ்மட்டுமல்ல எமிலி சோலாவின் பெரும்பாலான நாவல்கள், அல்பட் மொறேவியாவின் வுமன் ஒப் ரோம் போன்றவை, மில்லரின் ட்ரொபிக் ஒப் கன்சர், கப்றிகோன், போன்றவை, வெல்சின் இன் த டேஸ் ஒப் த கொமெற், ஆன் வெரொனிகா, லோறன்சின் பெரும்பாலானவை முக்கியமாக றெயின் போ லேடி சற்றலிஸ் லவ்வர், கில்லின் வெல் ஒப் லோன்லினெஸ், டெக்காமறன் போன்றவைகள்கூட கிழக்கத்தையவனுக்கு அவனால் தீண்டமுடியாதவைகளாகவே காட்சியளிக்கும்.

ஆனால் இன்றைய கிழக்கத்தையவனுக்கும் முதலாவது உலக யுத்தத்திற்கு முற்பட்ட மேற்க்த்தையவனுக்கும் குறிப்பிடத்தக்க அளவில் வித்தியாசமிருக்கவில்லை என்பதும் உண்மைதான். விக்ரோறியக் காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட வெகு தீவிரமான கட்டுப்பாடு இதை நினைவுறுத்தும். இதே நேரத்தில் கி. பி. 5—15 நூற்றாண்டு வரை ஐரோப்பிய நாடுகளில் படுநிர்வாணமாக வாழ்க்கை நடாத்தப்பட்டதும் விபசார விடுதிகள் நடாத்தப்பட்டதும் அதற்கு எட்வட் கென்றி சாள்ஸ் போன்ற மன்னர்களின் ஆதரவு இருந்தமையும் கவனத்திற்குரியது. விக்ரோறியனிசம் 20-ம் நூற்றாண்டுவரை தொடர்ந்து வளரவே செய்தது. மூன்று வருடமாகக் கஸ்டப்பட்டு எழுதி 1915-ல் வெளியிடப்பட்ட லோறென்சின் றெயின்போ, "ஆண்குறி பற்றி முழு காட்டுமிராண்டித்தனமாக விவரிக்கப்பட்ட நூல்" என விமர்சிக்கப்பட்டதிலிருந்து இதனை அறியலாம். அதுமட்டுமல்ல தொடர்ந்து லோறென்சின் எழுத்துக்களே ஒதுக்கப்பட்டதுமட்டுமல்லாது அவரது பெயரையே பத்திரிகைகள் பிரசுரிக்க மறுத்துவிட்டன. இதனால் அவரது முயற்சிகள் சில சந்தர்ப்பங்களில் வேறுபுனை பெயரில் வெளியிடவேண்டிய நிர்ப்பந்தமான நிலையும் ஏற்பட்டது.

இந்நிலையில் 1933-ல் அமெரிக்காவில் யுலிசஸ் ஏற்படுத்திய புதிய வரைவிலக்கணம் முக்கியமானது. முதலில் யுலிசஸ் 1923-ல் பிரசுரிக்கப்பட்டாலும் அத்தனையும் தீயினுல் நிர்மூலமாக்கப்பட்டன. இதன் பின்பு 1924ல் பரிசில் பிரசுரிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் 1930ல் இதனைப் பிரசுரிக்கமுற்பட்டார்கள். கேதே (Goethe) வுடன் சமமாகக் கணிக்கப்பட்ட ஜோய்சின் இம்முயற்சியை "தற்கால அல்லது பழம் இலக்கியங்களில் காணப்படும் மிகமிக இழிவான ஆபாசமான நூல்" என ஜேம்ஸ் டக்ளஸ் இழிவாக விமர்சித்தார். இவ்வகையாக இழிவுபடுத்தப்பட்ட இந்நாவலை என்ன நோக்கத்தோடு எண்ணத்தோடு ஜோய்ஸ் உருவாக்கினுர் என்பதே அமெரிக்காவில் அலசப்பட்ட பிரச்சினையாகும்.

உருவாக்கப்பட்ட விடயம் உண்மையில் பாலுணர்ச்சிகளை உருவாக்குவதாயோ அல்லது சமூகத்தால் கெட்ட கீழ்த்தரமான எனக் கணிக்கப்படும் ஆபாச எண்ணங்களை உருவாக்குவதாயோ இருப்பின் அவ்விடயம் தவிர்க்கப்படவேண்டிய தொன்றென்ற கருத்தே இறுதியில் எடுக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே யுலிசசும் ஆராயப்பட்டது.

வுல்சியன் கருத்துப்படி ஜோய்சின் அடிப்படை எண்ணமும் கருத்தும் இலக்கிய ரீதியானதே. எவ்வகையிலும் மக்களிடையே பாலுணர்ச்சியைக் கிளறவேண்டுமென்பதோ கீழ்த்தர பாலுணர்ச்சி சம்பந்தப்பட்ட எண்ணங்களை உருவாக்கவேண்டுமென்பதோ சிறிதளவும் இருக்கவில்லை. கூறப்படும் கதை, கதையில் வரும் பாத்திரங்கள், வாழும் இடம், சூழ்நிலை, வளர்க்கப்பட்ட முறை என்பனவற்றிற்கேற்ப கதையை நடாத்த முற்படும் ஜோய்ஸ் அவர்கள் பாவிக்கும் வார்த்தைகளை நடைமுறைகளை யதார்த்த பூர்வமாகச் சித்தரிக்கின்ருர். வேண்டுமென்றே அவைகள் புகுத்தப்பட்டவையல்ல. கதையோடு ஒட்டிப் போபவை அவை. ஊத்தைக்காக உருவாக்கப்பட்ட ஊத்தையாக அவைகள் இருக்கவில்லை. சாதாரண சராசரி மனிதனின் மனதில் அவைகள் பாலுணர்ச்சித் தோற்றங்களை வெளிக்கொணராமலிருந்தன. ஆனுல் இவைகளெல்லாம் யுலிசஸ்சை முழுமையாகப் பார்க்கும்போது ஏற்படுபவைதான். குறிப்பிடப்பட்ட சில பந்திகளை தனியாக எடுத்துப் பார்ப்போமாயின் நிச்சயமாக இம்முடிவிற்கு வரவியலாது. பற்பல இடங்களில் அம்மணமான பல வார்த்தைகளும் சம்பாஷணைகளும் காணப்படுகின்றன. பிலாண்டறர், வுமன் ஒப் ருேம், லேடி சற்றலிஸ் லவ்வர் என்பனவற்றிலும் இப்படியான நிலைகள் பல உள. ஆனுல் இவைகளை மதியாது புத்த

கத்தை முழுமையாகப் பார்க்கும்போதுதான் புத்தகத்தின் உண்மையான நிலை புரியும். புத்தகம் அல்லது அவ்வெழுத்து எதைக் குறிக்க முனைகின்றது என முழுமையாக ஆராயவேண்டும்.

பாலுணர்ச்சிகளைக் கிளறுவது அதனது தனித்துவமான நோக்கமாயின் அதுவே தவிர்க்கப்படவேண்டியதும் ஆபாசமானதுமாகும். 'ஹெமன்ஸ் ஒப் லஸ்ற்' எழுதப்பட்டது இந்நோக்கத்திற்காகவே. இதனாற்றான் இது தடைசெய்யப்பட்டது. அதே வேளையில் போர் எவர் அம்பர், டெக்காமறன் என்பவை தடைசெய்யப்படாமல் தப்பியதும் இந்த அடிப்படையில் வைத்துப் பார்க்கப்பட்டதாலேயே.

அதே நேரத்தில் டெக்காமறன் மக்களைக் கவரும் வண்ணம் குறைந்த விலைக்குப் பிரசுரித்து விற்கப்பட்டிருப்பின் நிச்சயமாக அது தடைசெய்யப்பட்டிருக்கும். ஏனெனில் அங்கு பிறிதொரு எண்ணம் டெக்காமறனின் இலக்கிய அந்தஸ்தைக் குறைக்க முனைகிறது.

ஆபாசத்தின் வரைவிலக்கணம் காலத்திற்குக் காலம் மாறுமென்பதற்கு வெல் ஒவ் லோன்லினெஸ் பிறிதொரு உதாரணமாகும். 1928ல் வெளிவந்த இந்நூலில் பெண்களிடையே நடைபெறும் பாலுணர்ச்சிச் சேட்டைகள் முக்கியமாக விவரிக்கப்பட்டுள்ளன. ஒத்தபாலாரின் விளையாட்டுக்களைப்பற்றிய சித்தரிப்பைக் கொண்ட இந்நூலைப் பெரும் பெரும் எழுத்தாளர்களே புகழ்ந்தனர். நூலின் ஆசிரியை கையாண்ட நடை, எடுத்துக்கொண்ட விடயம், சொல்லுந் திறன் எல்லாவற்றையுமே பிறர் புகழும் நேரத்தில் ஜேம்டக்ளஸ் சன்டே எக்ஸ்பிறசில் மிகவும் பாரதூரமாகக் கண்டித்தமையால் இப்புத்தகம் தடைசெய்யப்பட்டது.

"இந்நூலை இளைஞர்களிடையே கொடுப்பதிலும் பார்க்க அசிட் திராவகத்தை கொடுப்பது மேலென" டக்ளஸ் குறிப்பிட்டார். இதைத்தொடர்ந்து பலத்த சர்ச்சைகள் நாலாபக்கங்களிலும் கிளம்பலாயின புத்தக விற்பனையாளர்கள், மதகுருமார்கள், எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், அறிஞர்கள் இப்படியாகப் பற்பல பிரிவினரும் இந்நூலை ஆபாசமற்றதென்றே முடிவுகட்டினர். அதற்காக நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கவும் முன்வந்தனர், ஆனாலும் தடை அகற்றப்படவில்லை. பதிலாக புத்தகம் அழிக்கப்பட்டது.

எலியற், ஜீலியன் ஹக்ஸ்லி, வர்ஜினியாவுல்ப், பெனட். பொஸ்ரர் இப்படியாகப் பலதரப்பட்டவர்கள் நூலை ஆதரித்துத் தொடர்ந்து எழுதியும் பேசியும் வந்தனர். இப்படியாக வேறெந்த

நூலுக்கும் ஆதரவு கிடைத்ததில்லை. எனினும் இவைகளால் எதுவித பலனும் கிடைக்கவில்லை. ஆனால் திடீரென 1949ல் மீண்டும் இங்கிலாந்தில் பிரசுரிக்கப்பட்டபோது இதை எவரும் எதிர்ப்பதாயில்லை. மாறாக சாதாரண விலைக்கு எங்குமே கிடைக்கக்கூடியதாயிருந்தது.

இதனிலிருந்து "பாலுணர்வு மனித வாழ்க்கையிலிருந்து பிரிக்கப்படமுடியாததொன்று. கலை இலக்கியங்களில் அது ஊடுருவிக்கொண்டே இருக்கும். அது உபயோகமானதும் அத்தியாவசியமானதுமாகும். அதனை உணரும்போதுதான் அதனின் மதிப்பை நாம் உணர்வோம்" என்று கூறும் லோறென்சின் வார்த்தைகள் பெரும்பாலும் சரியாகவே புலப்படும். லோறன்சின் ஒத்த கருத்துடைய எலிஸ் சொல்வதும் மதிக்கக்கூடியதுதான் "மனித வாழ்வில் ஆபாசம் தவிர்க்கமுடியாததொன்றுமட்டுமல்ல. நிரந்தரமானதுங்கூட." அதுமட்டுமல்ல உஸ்பென்ஸ்கி, பெட்யேவ் என்போரின் கருத்துப்படி மனிதனை ஆத்மீகத் துறைக்கு இழுத்துச் செல்வதும் அதனை ஊட்டுவதும் ஆபாசமேதான்! ●

* * * * *

## தா(ய்)யார் ?

அமெரிக்காவில் இருந்து திரும்பிய சுவாமி விவேகானந்தரைக் கண்டு தரிசிக்கவும், அவரிடமிருந்து பலவித உதவிகளைப் பெறவும் பலர் அடிக்கடி அவரைக் காணச் சென்றனர்.

அப்படிச் சென்றவர்களுள் பசுவதை தடுப்புச் சங்கத்தின் தலைவரும் ஒருவர். அவர் விவேகானந்தர் மூலம் தனது சங்கத்துக்கு நிதியுதவி திரட்டும் நோக்கத்தில் சென்றிருந்தார்.

ஆனால் தன்னைக் காணவந்த அச்சங்கத் தலைவரிடம் சுவாமி விவேகானந்தர், "பசுக்களைக் காப்பாற்றுவதற்கு முதல், ஆயிரக் கணக்கில் வறுமையால் செத்துக்கொண்டிருக்கும் ஏழைகளைக் காப்பாற்ற தங்கள் சங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது?." எனக் கேட்டார்,

அதற்கு அச்சங்கத்தலைவர், "அதைப்பற்றி நாம் கவலைப்படப் போவதல்லை, எங்கள் சங்கத்தின் நோக்கம் பசுமாடுகளைக் காப்பாற்றுவதே. காரணம் எல்லா இந்துக்களுக்கும் பசுமாடுதான் தாய்." என்றார்,

உடனே விவேகர்னந்தர், "ஓ! உங்களைப் போன்றவர்களுக்கு அதைவிட வேறு யார் தாயாக இருக்க முடியும்?" என்றார்.

— மூ: பொ.

# ஏனிந்தப் பெருமூச்சு?

— ஷெல்லிதாசன்

வனத்தில் உறையும் விலங்கொடு—உயர்
வானில் பறக்கும் புட்களும்
மனத்தில் துயரம் இன்றியே — நல்
வாழ்வை ரசித்துக் களிக்குது
இனத்தில் உயர்ந்த இனமென் — இங்கு
எழுந்த மனிதப் பிறவிகள்
இனிய வாழ்வுக் கேங்கியே — பேர்
அயர்வுப் பெருமூச் செறிகுது.

நெற்றி வியர்வை சிந்தியே – நிதம்
நிலத்தில் பயிர்கள் வளர்ப்பவன்
வெற்றி,யின்றி வாழ்கிருன் — தினம்
வேண்டி உணவுக் கேங்கிருன்
வியக்கும் தொழில்கள் ஆயிரம் — இங்கு
விதமாய் ஆக்கும் தொழிலாளி
பிணிக்கும் துயர வாழ்வுடன் — தினம்
பெருமூச் செறிந்து வாழ்வதேன்.

படித்துப் பட்டம் பெற்றவன் — தன்
படிப்பை உழைப்பாய் மாற்றிட
துடித்தும் தொழில்கள் இன்றியே — வீண்
துயர மூச்சு விடுகிருன்
படிக்க வைத்த பெற்றவர் — தம்
பணத்தை வீட்டை இழந்தனர் — மகன்
துடிக்கும் துயர நிலையினுல்
துன்ப நீரைச் சொரிகிருர்.

வாழத் துடிக்கும் மங்கையர் — பலர்
வாடி உள்ளம் சோர்கிருர் — மண
மாலைக் கேங்கி வாழ்வினில் — நிதம்
வாழ்வைப் பெருமூச் சாக்கிருர்
நாளை வாழ்வைச் செலுத்திட — இங்கு
நாங்கள் உயிர் வாழ்வமோ — என
ஏழை உள்ளம் ஏங்கியே
ஏனிப் பெருமூச் செறிகிருர்.

உண்மை நிலைமை உணர்ந்திடில் — நம்
உள்ளம் எல்லாம் விழித்திடில்
இந்த நிலைமை மாயுமே — வீண்
இதயப் பெருமூச் சோயுமே
நல்ல வாழ்வு மலருமே — எம்
நாட்டில் தீமை கருகுமே
இல்லை,யென்று சொல்பவர் — இனி
இல்லை யென்ப தாகுமே,

★ ★ ★ ★

## அனுபவம் புகன்றவை

தொகுத்து அனுப்பியவர்: செல்வி: நந்தினி முத்துக்குமாரு.

*அறவாழ்வில் ஆசையுள்ளவன் உண்மையைச் சார்ந்து நிற்கும் போதுதான் அவன் துக்கம் தொலைகிறது,*

—பிளேட்டோ

*உடற்றுன்பம், மனச்சான்றின் பச்சாதாபம் இவ்விரண்டையும் தவிர்த்து, மற்றவைகள் வெறும் கற்பனைகள்; உண்மையானவைகளல்ல,*

—ரூஸ்ஸோ

*செல்வத்தை உண்டாக்காமல் நுகர உரிமைகிடையாது: அதுபோலவே இன்பத்தை உண்டாக்காமல் அதனை நுகர உரிமை கிடையாது.*

—பெர்னுட்ஷோ

சிறுவர் கதை

# அவனும் திருந்துவானு?

★ எம். எஸ். எம். ஜின்னு ★

அஸீஸ் பணக்கார வீட்டுப் பிள்ளையாகப் பிறந்து, செல்வச் செழிப்பில் வளர்ந்து வந்தான். செல்வந்தனின் மகன் எனும் கர்வத்தாலோ என்னவோ, கல்வியைப் புறக்கணித்து வாழ்நாளை வீணுக்கினுன்; ஊதாரியாக கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றுவதிலும், சினிமா, நடனம், நாடகம் என்றெல்லாம் கூறி அலைந்து திரிவதிலுமே தன் வாழ்நாளைக் கழித்து வந்தான்.

அவனுக்கும் பெற்றோர்கள் இருக்கத்தான் செய்தார்கள். அவன் அவர்களின் வார்த்தை வரம்புகட்கு, உட்பட்டால்தானே? ஒருவாறு அஸீஸ் திருடவும் பழகிக்கொண்டான். காட்டுப் புலிக்கு மனிதனை இப்படித்தான் கடிக்கவேண்டும் என்று பழக்கவும் வேண்டுமா? தன் நண்பர்களுடன் கூடி தன் கிராமத்தையே சுற்றிச் சுற்றித் திரிவது அவனுக்கு புளித்துவிட்டதுபோலும்.

ஒருநாள், அவன் தன்வீட்டை விட்டே ஓடிவிட எண்ணினுன். இவ்வேளையில் அவன் ஆத்ம நண்பர்களில் ஒருவனுன அன்வர் அங்கே வந்தான். தன் எண்ணத்தை வெளிப்படுத்தினுன். தன் அன்பு நண்பனுக்கு அஸீஸ். "நல்ல ஐடியா அஸீஸ். நானும் இதுபற்றித்தான் யோசித்துக்கிட்டிருக்கிறேன். நாம் கொழும்புக்குப் போவோம். அது பெரிய நகரம்டா; அங்குபோய் ஏதாவது வேலைவெட்டி செஞ்சி பிழைத்துக்கொள்வோம்" என்ருன் அன்வர். "நல்ல யோசனைதான் ஆனுல் பணம்......" என இழுத்தான் அஸீஸ். "டேய் அஸீஸ், உன் உம்மாகிட்டே போய் ஒரு நூறுரூபாய் கேளுடா?" என்ருன் அன்வர்.

"என்ன, நூறு ரூபாயா? எவ்வளவு லேசா சொல்லிட்டே, எந்த தாய்டா இவ்வளவு பணம் தருவா?" என்ருன் அஸீஸ்.

அதற்கு அன்வர், "ஊம்...தர மறுத்தால், உம்மா! என்னை உயிரோடு பார்க்க முடியாமல் போய்விடும். என் பிணத்தைத்தான் பார்க்கப் போறீங்க எண்டு சொல்லு. இதற்கு எந்தத் தாயும் சம்மதிக்காதிருப்பாளா?" எனக் கேட்டான்.

“நீ நல்ல புத்திசாலிடா”, என்று தன் நண்பனை வாயார புகழ்ந்த வாறு தனது வீட்டிற்கு ஓடினான் அஸீஸ்,

தாயிடம் நூறு ரூபாய் கேட்டான் அஸீஸ்: தாய் பதறினாள்-கதறினாள் - துடித்தாள். “டேய் அஸீஸ், உனக்கென்னடா பைத்தியமா? போய் படிடா” என்றாள் அவன் தாய்.

“படி, படி எப்போதும் இதே பல்லவிதான். சரி, சரி, இப்ப நீங்க பணம் தரப்போறீங்களா இல்லையா?” என்றான் அஸீஸ். “நானா, யாரு நானா, உங்களுக்கு இந்தப் புத்திய கற்பித்தது” என அழுத வாறு கேட்டாள் அவன் தங்கை. பாசம் அவளை அழவும் செய்து விட்டது. “நீ பொத்து வாய்” என்றவாறு ‘பளீர்’ என அறைந்தான், அவள் மென்மையான பிஞ்சுக் கன்னத்தில். பாசம் அந்த அடியை அன்புடன் ஏற்றுக்கொண்டது. பாவம் அவள்! அவள் சேற்றிலே மலர்ந்த தாமரை மலரைப்போல் திகழ்ந்தாள்.

இவ்வளவையும் கேட்டுக்கொண்டிருந்த அவனுடைய தந்தை அங்கே வந்தார்.

“டேய் அஸீஸ், என்ன கேட்ட..... பணமா” என்றார் அமைதியாக. “ஆமா! பணம்தான் வேண்டும்” என்றான் அகங்காரங்கொண்ட அஸீஸ். அவன்தான் கெட்டுவிட்டானே, அவனா தந்தைக்கு மதிப் பளிக்கப்போகிறான்! ‘எவ்வளவு’ என்றார் அவர். “நூறு ரூபாய்” என்றான் கல்நெஞ்சங்கொண்ட அஸீஸ், “இதற்குப் பிறகு இங்கு வரவே மாட்டாயே” எனத் தந்தை கேட்க, “அடுத்த ஜென்மத்திலும் வரமாட்டேன்” என்றான். மதிமறந்து, மதிகெட்ட கூட்டத்தோடு சேர்ந்து கெட்டுவிட்ட அஸீஸ். “உம் .....இந்தா பணம்” என நூறு ரூபாயைத் தூக்கிக் கொடுத்தார் அவன் தந்தை; இப்படியும் ஒரு தந்தையா? “பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு” எனும் கூற்று பொய்தானா?

‘என்னங்க நீங்க அவன் கேட்டாண்டு பணத்தைத் தூக்கிக் கொடுத்துவிட்டு நிக்கிறீங்களே” எனக் கதறி அழுதாள் அவன் தாய். அவன் தங்கையும் கூடத்தான். அஸீஸோ. வீறுநடை போட்ட வண்ணம் வீட்டைவிட்டு வெளியேறினான்.

“அமீனா! என் மனம் கல்லா? என் மனம் படும் வேதனையை யார் அறிவார்? ‘பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு’ எண்டு சும்மாவா சொல்லிவச்சாங்க. அமீனா! நான் பணம் கொடுக்காவிட்டால், உன் நகையைக் கழட்டிக்கொண்டுபோய்......” என இழுத்த வாறு, “என் மகன் ஏன் இந்த ஊரிலே, அப்படி தாயிடம் திருடிய

மகன் என கூறவேண்டும் என்றெண்ணித்தான் அவன்கேட்ட தொகை பணத்தை அப்படியே கொடுத்திட்டேன். அவனு திருந்தி வருவான், நிச்சயமா! அவன் திருந்தி வந்திடுவான்'' என நீண்ட ஒரு உரை நிகழ்த்தி பெருமூச்சு விட்டார், அஸீஸின் தந்தை!

அஸீஸ் பணத்துடன் அன்வரின் வீட்டுக்கு ஓடோடிச் சென்ருன். "டேய், அன்வர் இதோ பணத்தோடு வந்துவிட்டேன்'' என்ருன் அஸீஸ். அஸீஸும் அன்வரும் புறப்பட்டார்கள் கொழும்பை நோக்கி. அஸீஸ் அன்வரின் வேண்டுகோளின்படி ஒரு 'சூட்கேஸ்' வாங்கி அதில் தனதும், தன் நண்பனினதும் துணிமணிகளை வைத்துக் கொண்டான். ஒருவாறு இருவருமாக புகையிரத நிலையத்தையும் அடைந்துவிட்டார்கள். போகவேண்டிய புகையிரதத்திற்கான காசை இருவருக்குமாக செலுத்திஞன் தறுதலைபிடித்த அன்வர்.

புகையிரதத்திலும் இருவருமாக ஏறியாகிவிட்டது. புகையிரதம் விரைந்து சென்றுகொண்டிருக்கிறது, கொழும்பை நோக்கி. ஆங்காங்கே காணப்படும் தென்னந்தோப்புகளும், பச்சைபசேலெனும் வயல் நிலங்களும் அஸீசுக்கு சந்தோஷத்தை அளித்தன. அஸீஸ் இவற்றை இரசித்தவாறு இருக்கிருன். ஆனுல் அன்வருக்கோ இவற்றைப் பார்த்துப் பார்த்துப் புளித்துவிட்டது. ஆம்! அன்வர் எத்தனையோ முறை கொழும்புக்குச் சென்றுள்ளான். கொழும்பைச் சுற்றி சுற்றி பழக்கப்பட்டவன். அஸீசுக்குத்தான் இவை ஆச்சரியமாக இருக்கலாம். பாவம், அவன்தான் அப்பாவியாயிற்றே.

அன்வர் தனது திட்டத்தைப்பற்றி யோசிக்கலானுன்; ஏமாற்றுப் பேர்வழியானுன். ''டேய் அன்வர், தூக்கம் வர்ருப்புல இருக்குடா'' என்று கொட்டாவி விட்டவாறு அன்வரைப் பார்த்துக் கூறினுன்; அன்வருக்கோ மனதினுள் பெரு மகிழ்ச்சி. சந்தர்ப்பம் தன்னையே தேடி வருகின்றது என எண்ணிய அன்வர் ''சரி அஸீஸ் நீ தூங்கி எழும்பு......கொழும்பில் போய் நிறைய இடங்களைப் பார்க்கணும்'' என்ச் சொன்னுன். ''இன்னும் நிறையத் தூரம் போகணுமாடா அன்வர்'' எனத் தூக்கம் நிறைந்த கண்களோடு கேட்கலானுன் அஸீஸ்.

''இல்லை, இன்னும் கொஞ்சத் தூரம்தான் போக இருக்கு. இன்னும் இரண்டு மணி நேரத்தில் நம்ம நாட்டின் தலைநகரமான கொழும்பை அடைந்திடலாம். சரி, சரி நீ கொஞ்சம் தூங்கு; ரெஸ்ட் எடுத்துக்கோ'' என்ருன் உள்ளமேயற்ற அன்வர்.

புகையிரதம் 'களனி' புகையிரத நிலையத்தை அடைந்தது. அஸீசோ ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான், அன்வர் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, சூட்கேசை சோதிக்கலானுன். (இவர்கள் பிரயா

ணம் செய்யும் பெட்டியில் இவர்களைத் தவிர வேறு யாருமிலர் என்பது குறிப்பிடத்தக்கது.) அதிலே நூறு ரூபாய் சொளையாக அப்படியே இருந்தது. எடுத்தான் சூட்கேசை கையில் 'நல்லா ஏமாந்துட்டான் அஸீஸ்! அஸீஸ்!! நம்பநட - நம்பி நடவாதே' எனும் கூற்றுக்கு சான்ருக நீ திகழ்வாயாக!' என்று முணுமுணுத்தவாறு சூட்கேசுடன் புகையிரதத்தை விட்டிறங்கினுன். படித்த திருடன் அல்லவா! அவன் இப்போது எங்கே! கொழும்பில்தான் எங்கோ ஒரு மூலையில் சந்தோசமாக இருப்பான். ●

# இந்தப்பக்கம் என்ன(ப்)பா?

## 'ஒழுக்கம்'

"நந்தினி"

தேடிய காதலி
ஆடை களைந்தனள்;
தேக்கிய
ஆண்மை எழ
ஓடி வழிந்தது
ஓர்பல ஆண்டுகள்
தேடிய 'நல்லொழுக்கம்'

வெளி

முட்டைகள்
கொட்டைகளில்
தமை
மூடித் தவம் கிடக்கும்
சிறை
விட்டவை வந்துவிட்டால்
ஒளி
தேக்கிச் சிரித்திருக்கும்

கள்

முட்டியைக் கிட்டியதும்
இரைக்கும்
வயிற்றில்
ஒட்டிய வேகத்திலே
உதைக்கும்

குறும்'பா'

**தொடரும் நெடுங்கதை**

*சென்ற இதழில் —*

இரண்டு வருடங்களுக்கு முன்பு ஊரைவிட்டே ஓடியவன் திருந்தியவனாகத் திரும்பி வந்தான். ''வாழும் பருவத்தில்'' வந்து நின்ற தங்கையைக் கண்டபோதுதான் தன் கடமை அவனுக்கு நினைப்பு வந்தது. அவனைப்பற்றிய சிந்தனையோடு நடந்தவன் வழியில் பார்வதியைச் சந்திக்க நேர்ந்தது.



# அவள்? இன்னும்....

''இளந்தீவகன்''

## 2

இரவெனும் கரும்போர்வையைக் களைந்தெறிந்து விட்டு, நில மகள் நிர்வாண நடம் புரியத் தொடங்கியிருந்த இளங்காலை வேளை, நேற்றைய இரவை உறங்கியும் உறங்காமலும் கழித்து விட்டிருந்த போதும் பார்வதி உற்சாகமாகவே காணப்பட்டாள். இனிக்கும் நினைவுகள் அவளது இதயத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததுதான் அதற்குக் காரணமோ, என்னவோ?

முற்றத்து வேலியோரமாகச் செழித்து வளர்ந்திருந்த மலர்ச் செடிகளுக்கு நீரிறைத்துக் கொண்டிருந்தாள் அவள். கரங்கள் வழக்கமான அந்தப் பணியில் ஈடுபட்டிருந்த போதும் நெஞ்சமோ அவனையே வலம் வந்து கொண்டிருந்தது.

நினைத்ததுமே நெஞ்சம் இனித்தது அவளுக்கு.

'அவர் எப்படி மாறிப் போய் விட்டார்!'

அவனது மாற்றம் அவனைச் சார்ந்துள்ள அனைவருக்குமே ஒருவித வியப்புக் கலந்த மகிழ்வைத் தரத்தான் செய்தது.

ஆனால்,

பார்வதியைப் பொறுத்த வரையில்

அவளுக்கு ஒருவகையில் ஏமாற்றம்தான்.

முன்பெல்லாம், ''பார்வதி .. .. பார்வதி'' என்று அவளையே வலம் வந்துகொண்டிருந்தவன் இப்போதெல்லாம் யாரோ ஒரு 'பெரிய மனுஷிக்கு' முன்பு நடந்து கொள்வதைப் போல நடந்து கொள்கிறான்.

வார்த்தைகளில் சுருக்கம்; அவளைப் பார்க்கும் போதுகூட ஒருவினாடி தான் பார்க்கிறான். மறுவினாடி தன்வழியே கண்டும் காணாதவனாய்ப் போய் விடுகிறான். காரணம் என்ன? அதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இருந்தும்—

இன்னும் அவள் இதயத்தை இனிய எண்ணங்கள் ஆட்கொண்டிருக்கின்றன என்றால், ஒருவாரத்துக்கு முன்பு நிகழ்ந்துவிட்ட அந்தச் சந்திப்பே அதற்குக் காரணம். அன்று சந்தித்தபோது அவன் அவளிடம் சொன்ன அந்த வார்த்தைகள் .. ..........

''என்னை நீ மன்னித்திருந்தால் அது ஒன்றே எனக்குப் போதும் பார்வதி!''

'அவர் ஏன் அப்படிச் சொல்லவேண்டும்'

'அதிலிருந்து என்ன தெரிகிறது?'

'தன்னைப்பற்றிய தவறான அபிப்பிராயங்கள் என்னிடமிருப்பதை அவர் விரும்பவில்லை.'

'ஏன்? ஏனம்மா?'

அவள் மனமே அவளைக் கேலி செய்வதுபோல் கேள்விகளைக் கேட்டபோது அவளிடமிருந்து அவளாலேயே தப்பித்துக்கொள்ள இயலவில்லை

தொடர்ந்து வளர்ந்த 'கன்னிக் கற்பனை'களால் சிவந்த அவள் கன்னங்கள் மேலும் செம்மை பெற்றன, அவன் அணைத்திருந்தால் கூட அவள் கன்னங்கள் இத்தனை தூரம் சிவந்திருக்குமோ என்னவோ?

இப்போது—

அவனைப் பார்க்கவேண்டும் போல் ஒரு ஆவல் அவள் இதயத்தைப் பற்றிக்கொண்டது.

இப்போது போனால் ....?

போனால்......?

அவரைப் பார்க்கலாம் தான்! ஆனால், போகமுடியுமா?

'ஐயாவுக்குத் தெரிந்தால் கொன்றுபோட்டு விடுவார்' என்ற அச்சம் வேறு அவளை மிரட்டிற்று.

சில நிமிடங்கள் சிந்தித்தாள்.

'போவதா? வேண்டாமா?'

அச்சத்தை ஆசை வென்றது. அவள் புறப்படத் தயாரானாள்.

'ஐயா எங்கே போயிருப்பார்?'

எண்ணிக்கொண்டே வீட்டினுள் நுழைந்தவள் திடுக்கிட்டாள். பழைய நாற்காலி ஒன்றில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டே அன்றைய தினப் பத்திரிகையைப் புரட்டிக்கொண்டிருந்தார் தலைமைவாத்தியார். அவர்தான் அவளுடைய ஐயா அடிக்கடி தன் மூக்குச் கண்ணாடியை உயர்த்திவிட்டு, வாசற்புறம் பார்த்தவாறிருந்தார் அவர். யார் வரவையோ எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பது புரிந்தது பார்வதிக்கு.

தன்னை அலங்காரம் செய்துகொள்ளவேண்டுமென்பதற்காக தன் அறைக்குள் நுழைந்தவள் ஆறு நிமிடங்களுக்குள் தன் அலங்காரத்தை முடித்துக்கொண்டாள். தலையை வாரிப் பின்னிக்கொண்டதும், நெற்றியில் ஒரு விரலால் கீறிட்டுக் கொண்டதும் தான் அவள் செய்துகொண்ட அலங்காரம். ஆடைகள் தான் எப்போதும் போல தூய்மையாகத் தோற்றமளித்தனவே;

'இப்படி அலங்காரம் செய்துகொள்வதுதான் அவருக்குப் பிடிக்கும்.'

தன் அலங்காரத்தை நினைத்து மெல்லப் புன்னகைத்துக் கொண்டாள் அவள். ஒருதடவை அவளுடைய அழகைப்பற்றி அவன் சொன்னது இப்போது அவளது ஞாபகத்துக்கு வந்தது.

★

''—பெண்ணுக்கு அழகு தேவைதான், அதை நான் மறுக்கவில்லை. ஒவ்வொரு பெண்ணும் தன்னைத் தான் அழகுபடுத்திக் கொள்வதிலும் தவறில்லை. ஆனால் அந்த அழகு உள்ளத் தூய்மையின் பிரதிபலிப்பாக இருக்கவேண்டுமே தவிர, வெறும் விலைப் பொருள்களின் பட்டியலாக அது இருந்துவிடக் கூடாது......''

அவன் இப்படிச் சொன்னபோது பார்வதி மெல்லக் கேட்டாள். ''அப்படியென்றால் அழகில்லாத பெண்களெல்லாம் தங்களை எப்படி அழகுபடுத்திக் கொள்வதாம்?''

அவளது இந்தக் கேள்வியைக் கேட்டு அவன் மெல்லச் சிரித்துக்கொண்டான். பிறகு சொன்னான்.

"இங்கேதான் நீ தவறிழைக்கிறாய் பார்வதி. இந்த உலகில் அழகில்லாதவர் என்று யாருமே கிடையாது. ஒருவர் கண்ணுக்கு அழகில்லாததாகத் தோன்றுவது இன்னொருவர் கண்ணுக்குப் பேரழகாகத் தோன்றவே செய்கிறது. இதுவே உண்மை. எனவே நீ அழகில்லாதவர் என்று ஒரு சாராரைப் பற்றிக் கேட்பதில் அர்த்தமேயில்லை."

அவனது பதில் அவளை வியப்படையச் செய்தது; ஒரு நிமிடம் அவனைப்பற்றிச் சிந்தித்தாள் அவள்; அவன் அழகனா? அவனைவிடவும் எத்தனையோ அழகர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவளைப் பொறுத்தவரை அவன்தானே அழகன்; மெலிந்த அந்தச் சிவந்த இளைஞன் அவளுக்கு மட்டும்தான் பேரழகன். மற்றவர்களுக்கெல்லாம் அவன் அழகாகத் தோன்றவில்லை; தோன்றுவதில்லை என்பதே உண்மை. அழகைப் பொறுத்தவரை அவன் 'பரவாயில்லை' ரகம்.

ஆனால் பார்வதி?

எந்தப் பெண்ணுமே இணை நிற்க முடியாத அழகி அவள்; வெளி அழகுமட்டுமல்ல. அகத்தழகிலும் அவள் பேரழகுதான்;

திடீரென அவனிடம் இன்னொரு கேள்வியைக் கேட்டாள் அவள்;

"ஒரு பெண் எப்படியிருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?" அவன் வாய் திறந்து சிரித்தான்; பார்வதி கேட்ட கேள்வியின் உள் அர்த்தத்தைப் புரிந்துகொண்டுதான் அவன் அப்படிச் சிரித்தானா என்பது பார்வதிக்குத் தெரியவில்லை.

"பரவாயில்லையே பார்வதி! நீ பத்திரிகை நிருபராகலாம்!" என்று வேடிக்கையாகச் சொல்லிவிட்டுத் தொடர்ந்தான் அவன்;

"ஒரு பெண் எப்படியிருக்க வேண்டும் என்பது அவளது மனநிலையைப் பொறுத்தோ அல்லது அவளை மணந்து கொள்பவனைப் பொறுத்தோ அமையலாம். வேண்டுமானால் நீ எப்படியிருந்தால் அழகாக இருப்பாய் என்பதை நான் சொல்லட்டுமா?"

அவள் ஆவலுடன் அவன் முகத்தையே பார்த்தாள்.

"நீ இப்படியே இருந்தால் அழகாக இருப்பாய்!"

"அவ்வளவு தானா?"

"அவ்வளவுதான்!"

அவள் உதட்டைப் பிதுக்கினாள். 'உங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்பது போலிருந்தது அந்தச் சுளிப்பு. சில விநாடிகள் கழித்து அவன் சொன்னான்.

உண்மைதான் பார்வதி. உனக்கு அலங்காரமே தேவை

யில்லை உனது விழிகளில் தெரி ஒளியும் இதழ்களில் மிளிரும் புன்னகையுமே போதும்!'

''அவள் நாணத்தோடு விரலைக் கடித்தாள்.

★

''அடடே...... பார்வதியா? வாடி......வா''

ஓங்கி ஒலித்த சரசுவின் குரல் கேட்டுப் பயந்து விட்டாள் பார்வதி 'இப்படித்தான் இவள் ...நேரம் காலம் தெரியாமல்..' என்று முணுமுணுத்தபடியே சட்டென அவள் வாயைத் தன் வலக்கரத்தால் அடைத்தாள்.

'கொஞ்சம் சும்மா இருடி!'

'முடியாது!' என்றுள் சரசு.

'வந்த விருந்தாளியை வரவேற்காமல் இருக்க முடியுமா?''

''நான் விருந்தாளியா?''

'பின்னே வீட்டுக்காரியா'

சில நிமிட அமைதி. தான் கேட்டதில் ஏதோ ஒரு பெரிய நகைச்சுவையைக் கண்டுபிடித்து விட்டவள்போல சிரித்தாள் சரசு. பார்வதியின் காதருகே உதடுகளை வைத்து.

''உங்க ஐயாவுக்குத் தெரியாம எங்க அண்ணனைப் பார்க்க வந்தீங்களா அண்ணி?' என்றுள்.

பொய்க்கோபத்துடன் அவளைப் பிடித்துத் தள்ளினுள் பார்வதி.

'எங்களுக்கு வேறை வேலையே கிடையாதே!''

''கிடைத்தாலும் இப்படி ஒரு சந்தோஷமான 'வேலை' கிடைக்குமா? என்ன பார்வதி!''

சரசு கண்களைச் சிமிட்டினுள்; பார்வதி தவித்தாள். சரசுவிடமிருந்து விடுபட்டாகவேண்டுமே!

''மாமி எங்கை?''

அவளது கையைப் பற்றி வீட்டுக்குள் இழுத்தாள் சரசு: ''அம்மா, பார்வதி வந்திருக்கிறுள். மாமி வேணுமாம்!'' என்று சமையலறைப் பக்கம் பார்த்துக் கத்தினுள் அவள். தங்கம்—சரசுவின் தாய் வெளியே வந்தாள்.

''பார்வதியா ? வாம்மா!'' என்று ஆசையும், பாசமும் இணைந்த தொனியில் வரவேற்றவள் —

ஏதோ அண்ணர்தான் எங்களை ஒதுக்கி வைச்சிற்றுர். நீங்களாவது ஒரு காலத்திலை ஒற்றுமையாக இருங்க!'' என்று முடித்தாள். ஏனோ அவள் விழிகள் சற்றுக் கலங்கின.

சரசுவும், தாயும் தன்னை வரவேற்றுப் பேசிக்கொண்டிருந்தாலும் பார்வதியின் மனம்

அங்கே இல்லை. அவள் இதயம் அவனையே தேடிற்று.

'எங்கே போய்விட்டார் அவர் !'

'உள்ளே இருந்தால் இவ்வளவு நேரத்துக்கு வராமலா இருப்பார்.' அவள் விழிகள் அங்குமிங்குமாய் அலைந்தன.

வாய்விட்டுக் கேட்கவும் முடியவில்லை.

'எவ்வளவு கஷ்டப்பட்டு ஐயாவுக்குத் தெரியாமல் வந்திருக்கிறேன் இந்த நேரம் பார்த்து எங்கோ போய்விட்டாரே !''

அவன் மேல் அவளுக்குக் கோபம் கூட வந்தது.

'வாடி கோப்பி குடிப்பம்'

சரசு அவளை இழுத்தாள்; அவளது இழுப்புக் கேற்ப அவள் நடந்தாள். சமையலறைக்குள் அவள் நுழைவதற்காகக் கால் வைத்தபோது விருந்தைப் பக்கம் காலடியோசை கேட்கவே திடுக்கிட்டுத்திரும்பினுள் அவள். கையில் ஒரு புத்தகத்தைக் கொண்டு வீட்டினுள்ளிருந்து முற்றத்திலிறங்கி விரைந்து நடந்தான் அவன்.

'ஓ'வென்று கதறி அழ வேண்டும் போலிருந்தது பார்வதிக்கு. சிரமப்பட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு சமையலறையுள் நுழைந்தாள் அவள்.

— இன்னும் வரும் —

உத்தரவாதமுள்ள தங்க நகைகளுக்கு

ராணி ஆபரண மாளிகை

விஜயம் செய்யுங்கள்

ராணி

ஆபரண மாளிகை

224, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# உணர்வுகள் சுழல்கின்றன !

— யாழ். கலட்டியான்

விநாயகர் ஆலயத்திலிருந்து எழுகின்ற மங்கள இசை, காற்றுடன் கலந்து என் செவிகளில் முட்டிமோதி உள்ளத்தில் எதிரொலியை ஏற்படுத்திக் கொண்டு வெகுதூரம் சென்று கொண்டிருக்கிறது.

அந்த மங்கள இசை என் இதயத்தைப் பிழிந்து கண்ணீரென்னும் சாருக, என் உள்ளக் கிடக்கைகளை - இதயவேட்கையை பரிமளித்துக் கொண்டிருக்கிறது.

இதயத்தின் சோக நரம்புகளை மீட்டும் போது எழும் விரக்தியென்னும் இசை உள்ளத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று மனிதரின் உணர்வு நிலையைத் தட்டி எழுப்பி ரீங்காரமிடும் போது உணர்ச்சி வயப்பட்டு ஏதேதோ முடிவிற்கு வந்து விடுகிருர்கள் மனிதர்கள். ஆனுல், என்னுல் அப்படியான எந்த முடிவிற்கும் வரமுடியவில்லை. அது சந்திரன் எனக்களித்த தைரியமோ என்னவோ!

"சுஜாந்தினி! தோல்வியைக் கண்டு மனம் தளரக் கூடாது; தோல்விதான் வெற்றியின் முதற்படி; தோல்வி வாழ்விலேற்படும் போது மனம் போனபடி செல்லாமல் மனதைத் தன்வயப்படுத்தி சமாளிக்கப் பழகவேண்டும்" என்று என்றே ஒரு நாள் நான் இரண்டு, மூன்று நேர்முகப் பரீட்சைக்குச் சென்று தோல்வி கண்டு விரக்தியுற்றபோது சந்திரன் எனக்களித்த புத்திமதி அது.

• • •

மனதைத் தன்வயப்படுத்தி உள்ளத்து உணர்ச்சிகளை அடக்கியவாறு சந்திரனிடமிருந்து வந்த மணநாள் அழைப்பிதழை சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறு நான் பார்த்தபோது என் நெஞ்சம் விம்மிப் பொருமிற்று.

மேல் அட்டையில் பொறிக்கப்பட்டிருந்த சந்திரன் - பிறே

மா என்ற பெயர்கள் என்கண்களை குத்திட்டு நிலைக்கச் செய்தன; அந்த இணைந்த இரு பெயர்களையும் காணத் திறனற்ற விழிகள் கண்ணீரைச் சொரிந்தன. இதயத்தின் எங்கோவொரு பகுதியிலிருந்து எழும் 'கிர்......கிர் .....' என்ற உணர்ச்சி நரம்புகளின் துடிப்பொலி கண்ணீருடன் கலந்து மறைந்தது.

மணநாள் அழைப்பிதழை கரங்களில் போட்டுக் கசக்கியவாறு அண்ணாந்து மேகத்தைப் பார்த்தேன். அங்கே, தாரகைகள் என்பரிதாப நிலை கண்டு கண்சிமிட்டி சிரித்தன.

'மேகத்தை நீங்கள் ஆட்கொண்டதுபோல் சந்திரன் என் உள்ளத்தை ஆட்கொண்டதில் தவறென்ன? என்று என்மனம் தாரகைகளைப்பார்த்து கேட்கத் துடித்தது. கேட்டுத்தான் பிரயோசனம் என்ன? அவை பேசுமா!

○ ○ ○

என் வாழ்க்கையிலேற்பட்ட ஏமாற்றத்தை - சபலத்தையடக்கிக் கொண்டு, என்னைச் சமாளித்தவாறு, என்னை அலங்கரித்துக்கொண்டு, பாம்பு ஊர்ந்து செல்லும்போது ஏற்படுகின்ற நெளிவு வளைவுகள் போல் அமைந்த அந்த நீண்ட வீதிவழியாக, மங்கள இசை வந்த அந்த சந்நிதானத்தை நோக்கி நடக்கிறேன்.

நடையில் துரிதமில்லை, உற்சாகமில்லை. சந்திரனின் அழைப்பை மறுக்கமுடியாமல் தளர்ந்த நடையுடன் சென்று கொண்டிருக்கிறேன். வீதியின் ஒவ்வொரு திருப்பத்திலும் உள்ள மின்விளக்குகள் என் முகபாவத்தைக் காட்டிவிடுமென்று பயந்து உற்சாகம் கொண்டவள் போல் போலிநடிப்பு நடிக்கிறேன்; மற்றவர்களுக்கு நான் உற்சாகத்துடன் மணவிழாவில் கலந்து கொண்டேன் என்று காட்டினாலும் என் உள்ளத்திற்கு......?

இப்போது விரைவாகச் செல்கின்றேன். ஒரு திருப்பத்தில் அமைந்துள்ள மின் விளக்கை நோக்கிச் செல்லும்போது என்னைச் சுற்றிலும் ஒரு தடவை பார்வையைச் சுழலவிடுகிறேன். என்பின்னால் என் நிழல் தெரிகிறது. மின்விளக்கிற்கு நேர் கீழே சென்றதும் நிழல் என்னை முன் தொடர்கிறது. இந்தக் காட்சியைக் கண்டபோது என்ன விசித்திரம் என்று எனக்குள்ளேயே வியந்து கொள்கிறேன்.

இதுவரை காலமும் என் உள்ளத்தின் பின் பதுங்கியிருந்த காதல் என்ற நிழல் சந்திரனின் திருமணம் என்ற மின்விளக்கிற்கு நேரே சென்றதும் உள்ளத்தில் விரிசலையேற்படுத்தி காதல் என்ற நிழலை முன் நோக்கிக் காட்டுகிறதே!

ஆலயமுகப்பு விளக்கு என்னைப் பரிகசிப்பது போல் ஒளியை உமிழ்ந்து சிரிக்கிறது. என் உள்ளம்படும் வேதனை அதற்குத் தெரியப்போகிறதா என்ன! என் வேதனைகளை மனதில் போட்டு புதைத்துக் கொண்டு என்னையே நான் ஏமாற்றியவளாக உதட்டில் புன்னகையை இழையோட விட்டவாறு ஆலயப்படியேறி உள்ளே செல்கிறேன்.

மகரதோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த ஆலயம் என்றுமில்லாதவாறு பொலிவுடன் திகழ்கிறது. திருமண அழைப்பை ஏற்றுவந்த மக்கள் கூட்டம் ஆலயத்தினுள் நிரம்பி வழிந்துகொண்டிருக்கிறது. மேளவாத்திய ஒலி தொடர்ந்து முழங்குகிறது.

கூட்டத்தை விலக்கி மணவறையிருக்கும் இடத்தையெட்டிப் பார்க்கிறேன். மாப்பிள்ளைக் கோலத்தில் சந்திரன் புன்னகையுடன் அமர்ந்திருக்கிறார். இமைக்காது அவரையே பார்க்கிறேன். என் நெஞ்சம் விம்முகிறது. இன்னும் சிறிது நேரத்தில் சந்திரன் பிறேமாவின் கழுத்தில் மாங்கல்யம் அணிந்து அவளைத் தனது மனைவியாக்கிக்கொள்ளப்போகிறார் என்ற துடிப்பின் விம்மல்தான் அது நிற்கச் சக்தியற்றவளாக நான் ஒரு கரையில் வந்து அமர்ந்துகொள்கிறேன். ஆலயத்தைச் சுற்றிச் சுழன்று வரும் பார்வையைப் போல் இறந்தகாலத்தைச் சுற்றி என் எண்ண அலைகள் விரைகின்றன.

⊠ ⊠

மாலை ஐந்து மணி என்றதும் பூசைக்கான ஆயத்த மணியை அடித்துவிடுவார் சிவா ஐயர். மணியோசை எப்போது என் காதுகளில் விழும் என்று காத்திருப்பவள்போல் ஓட்டமும் நடையுமாக ஆலயத்தை அடைந்துவிடுவேன். அதற்கு காரணமே சந்திரன்தான். சிறுவயதிலிருந்து அப்படியொரு பழக்கத்தை நாம் ஏற்படுத்திக் கொண்டோம். பின்பு அவர் கொழும்புக்கு உத்தியோகம் ஆகிச் சென்றதால் பழக்கத்தை மறக்கவேண்டியதாயிற்று. உத்தியோகம் பார்க்கச் சென்ற இந்த ஐந்து வருடத்திற்குள் எத்தனையோமாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. ஆனால் அவர் 'நண்பி' என்றுஆரம்பித்து கடிதம் எழுதுவதை மட்டும் நிறுத்தவில்லை. ஊர்ப்புதினம் எல்லாம் எழுதுவார்.

⊠ ⊠

அவருடன் சிறுவயதில் பேசி சிரித்து மகிழ்ந்த நினைவுகள் பசுமையாக என் நினைவில் தோன்றிக் கொண்டிருக்கின்றன. சந்திரனுடனிருந்து சிரித்து மகிழ்ந்த நாட்கள் எத்தனை......எத்தனை......!

நினைவுச் சுழலில் சிக்கி மகிழ்ந்திருக்கும் என்னை கடகடவென

மேளத்தின் முழக்கம் தட்டி யெழுப்புகிறது. நிற்கும் திற னற்றவளாக எழுந்துநின்று சந் திரன் பிறேமாவின் கழுத்தில் மாங்கல்யம் அணிவதைப் பார்க் கின்றேன். அந்தக் காட்சி என் இதயத்தை அழுத்துகிறது.சிறிது நேரம் சென்றதும் மண மக்களை மறைத்து திரைநீள்கிறது. நான் சந்திரனைப் பார்க்க வேண்டு மென்ற நினைப்பில் திரையரு கில் சென்று நிற்கிறேன். எனது உறவையெடுத்துக் கொண்ட பிறேமா என்னை உணர்வு நிலை யில் திளைக்க விட்டவளாக தலை குனிந்த வண்ணம் பாலில் பழத் தைப் பிசைந்து எடுத்து சந்திர னின் கரத்தில் இடுகிருள். சந் திரன் அதனை வாங்கி மெதுவாக உண்கிருர். என்னையறியாமலே ஒரு ஏக்கப் பெருமூச்சு என்னுள் ளத்திலிருந்து எழுகிறது. அந்த நிகழ்ச்சி என்கண்களை உறுத்து கிறது. அதனைத் தொடர்ந்து பசுமையான நினைவுகளும் விரி கின்றன;

⊠ ⁂

அன்ருெரு வெள்ளிக்கிழமை. பூசை முடிந்ததும் சிவா ஐயர் பிரசாதம் வழங்கினுர். அதைப் பெற்றுக்கொண்ட சந்திரன் என் கையில் திணித்து சாப்பிடும்படி கூறி என்னையே பார்த்தார். அவர் பார்வையின் பொரு ளென்ன? அதை என்னுல் உணர முடியவில்லை. உணரவேண்டிய கட்டாயம் இருப்பதாகவும் அப் போது எனக்குத் தோன்ற வில்லை. நான் சிறிது உண்டு விட்டு மிகுதியை அவரிடம் கொடுத்தேன். மகிழ்வுடன் பெற்றுக் கொண்டார். என் நெஞ்சம் நிறைந்தது. அந்த நிறைவுக்கு மூலகாரணம் எது? நான் அவர்மீது கொண்டிருந்த தூயகாதலா?

சந்திரனைப் பொறுத்த மட் டில் அவர் நட்புக்கு இலக்கணம் வகுத்தார். ஆனுல் நானே காதலுக்கு இலக்கணம் வகுக் கத் துடித்தேன்; முடிவு...அவர் பிரேமாவின் கணவர்.

○ ○

பழைய சம்பவத்திற்கு முற் றுப் புள்ளி வைத்துவிட்டுச் சந் திரனைப் பார்க்கிறேன். எதேச் சேயாக அவர் பார்வை என் மீது பதிந்து நிலைத்து நிற்கி றது. அவர் முகத்தில் எந்த வித சலனமும் இல்லை; "சுஜாந் தினி! ஒரு ஆணும் ஒரு பெண் ணும் இணைந்துவிட்டால் அதற்கு காதல் என்ற பொருள் மட்டு மல்ல, நட்பு என்ற பொருளும் உண்டு" என்று சொல்வது போல் இருக்கிறது அவர் பார்வை? அவர் பார்வையி லிருந்து விடுபட்டு அவருடன் பழகிய உறவுக்கு விளக்கம் தேடுகிறேன். நட்பா.......... காதலா.....? என் உள்ளத்தில் விடைகாண முடியாத கேள் விகள் எழுந்து கொண்டிருந் ததால் நினைவு தடுமாறுகிறது. நிலத்தை நோக்கிச் சாய்வது

போல் ஓர் உணர்வு அவ்வளவு தான்......

எனக்கு சுயநினைவு வந்து கண் விழித்துப் பார்க்கிறேன். எனது அறையில் கட்டிலில்நான் படுத்திருப்பதும் தோழி வாணி என் அருகில் அமர்ந்து இருப்பதுவும் புரிகிறது. என்னால் பேச முடியவில்லை. தொடர்ந்தும் தூக்கத்தில் சுகம் காணத் துடிக்கிறேன்.

நாட்கள் நகர்கின்றன.

ஒரு மாலைப்பொழுது. நான் உறங்கிக் கொண்டிருக்கும் பொழுது என் நெற்றியில் கதகதப்பான ஸ்பரிசம் தோன்றியது போன்ற ஒருவித குளிர்ச்சி. கண் விழித்துப் பார்க்கிறேன். தன் கரத்தை என் நெற்றியில் அழுத்தி காய்ச்சல் காய்கிறதா என்று பார்த்தவாறு சந்திரன் என்னருகே நின்றுகொண்டிருக்கிறார்,

அவர் கரத்தின் ஸ்பரிசம் என் இதயத்துள் சென்று உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பிய போதிலும் அவரது களங்கமற்ற மாசற்ற செய்கையைக் காணும்போது நான் அவர்மீது கொண்ட காதல் முறையற்றது தான். வேறு ஒரு பெண்ணுக்கு கணவனாகிவிட்ட நிலையிற்கூட அவர் என்மீது காட்டிய பரிவை எண்ணி நான் நெக்குருகிப் போகிறேன்.

சிறுவயதிலிருந்து அவருடன் பழகிய சம்பவங்கள் பசுமையாக நினைவில் நின்றபோதும் அந்தப் பழக்கத்திற்கும் நட்பு என்ற பொருள் ஏன் இருக்கக்கூடாது என்று என்னுள் கேள்வி எழத்தான் செய்கிறது. ஆனால் அவை என் இதயத்திற்குப் புரியவில்லையே!

இதயம் ஓர் பணம் சேர்க்கும் பெட்டி (சல்லி முட்டி) அங்கு அன்பு என்கின்ற பணத்தைப் போட்டு நிரப்பி விட்டால், பின்பு அதனை உடைத்தாலன்றி அன்பு என்கின்ற பணத்தை அகற்றமுடியாது. அது போல என் இதயத்துள் நிறைந்திருக்கும் அவரன்பை என் உயிர் இருக்கும் வரை அகற்ற முடியாது. என் இதயம் உடைக்கப்பட வேண்டுமென்பதைத் தான் என்னுள் தேங்கி நிற்கும் உறவின் உணர்வுகள் விளக்குகின்றன போலும். இவற்றையெல்லாம் புரிந்தும் புரியாதவளாக நிற்கிறேனே! ஏன்?

"என்ன? என்னைக் கண்டதும் ஆச்சரியமடைந்து விட்டீர்களா... பேசாமடைந்தையாகி விட்டீர்களே... இப்போது எப்படிச் சுகம்...?" என்று முடிவை நோக்கி கேள்வி கேட்டு என் சிந்தனையைக் கலைக்கிறார் சந்திரன்.

"நல்ல சுகம்" என்று தட்டுத் தடுமாறி, உதடுகளில் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு கூறுகிறேன். "என் திருமண விழாவில் நீர் உற்சாகத்துடன் கலந்து கொள்ள முடியாத அளவுக்கு நான் கொடுத்து வைக்கவில்லை"

அவருக்கு எங்கே தெரியப் போகிறது என் உள்ளத்தின் வேதனை, என் உணர்வுகளை அவருக்குப் புரிய வைக்க நினைக்கிறேன். ஆனால், தோழிவாணி வழங்கிய அறிவுரை நினைவுக்கு வந்து என்னைத் தடுக்கிறது,

"வேறொரு பெண்ணுக்கு கணவனாகி விட்ட சந்திரனை இனி நீ நினைத்துப் பயனில்லை சுஜாந்தினி. அவர் உன்னை தோழியாக ஏற்றுப் பழகியது போல் நீயும் அவரை நண்பனாக ஏற்றுக்கொள். அது தான் நல்ல முடிவும் கூட. மனமார அவரைக் காதலித்த நீ உடனே 'நான் உங்களைக் காதலிக்கிறேன்' என்று அவரிடம் சொல்லி முடிவைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் நீயோ இன்றைய பெண்களைப் போல் அவரே 'உன்னை நேசிக்கிறேன்' என்று கூறட்டும் என்ற எண்ணத்துடன் இருந்தாய். முடிவு ...... நீ அவரைப் பறி கொடுத்தாய். இது யாருடையதவறு? உன்னுடையதுதான்.

நீ அவரை நினைத்து நினைத்து மனமுருகி நோயாளியாகி விட்டால் அவரால் நீ நோயாளியாக இருப்பதைப் பார்க்க முடியுமா? அல்லது உன் மனவேதனைக்கு தான்தான் காரணம் என்று அவர் அறிந்தால் அல்லது நீயாகவே உணர்ச்சியை அடக்கமுடியாமல் கூறிவிட்டால் அவர் மனம் என்ன பாடு படும்......சிந்தித்துப் பார். அவர் இல்வாழ்வு மலருமா? அவரும் உன்னுடன் சேர்ந்து மனமுருகி மடியவேண்டியதுதானா?" என்று அவள் எனக்குக் கூறிய புத்திமதியை எண்ணுகிறேன். ஒரு முடிவை நாடி என் மனம் விரைகிறது.

அவர் இல்வாழ்வு மலர வேண்டும். அவர் நோயாளியாவதை என்னால் பார்க்கமுடியாது. அவர் வாழ்வில்தான் என் மலர்ச்சியே தங்கியுள்ளது என்று எனக்குள் எண்ணிய வண்ணம் அவரை ஏறிட்டுப்பார்க்கிறேன்.

"சந்திரன்! உங்கள் திருமணவிழாவில் உற்சாகத்துடன் கலந்துகொள்ள முடியாமல் சுகவீனம்தடுத்தது, உற்சாகத்துடன் கலந்து கொள்ள முடியாவிட்டாலும் திருமணச் சடங்கிற்குச் சமுகமளித்தேனே! அது போதாதா?" என்று என்னை ஏமாற்றியவளாக இதயத்தை ஏமாற்ற முடியாதவளாக விகடமாகக் கூறுகிறேன்.

அவர் சிரிக்கிறார்...... அந்தச் சிரிப்பு என் உறவின் உணர்ச்சிகளைப் பெரிதுபடுத்துகின்றது.

"நேரமாகிறது சுஜா! நாளை மனைவியையும் கூட்டிக்கொண்டு வருகிறேன்! நீர் நடந்து திரிய வேண்டாம். பூரணஓய்வு எடும்" என்று தனக்கே உரிய செல்லப் பாணியில் கூறிக்கொண்டு விடை பெறுகிறார்.

அவருக்கு தலை அசைத்து விடை கொடுத்தவாறு அவர் போவதையே பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

அவர் சென்று மறைந்து விட்டார்! என் இதயம் கனக்கிறது! அதன் தாக்கத்தால் கண்ணீர் பெருகி வழிகிறது! இதயத்தினுள், உறவின் உணர்வுகளுக்கென்றே தனித்துவம் பெற்ற உள்ளக் கிடக்கைகள் எல்லாம் கண்ணீராக ஒன்று திரண்டு வெளிவந்து கொண்டிருப்பது இப்போது என் இதயத்திற்கு புரிகிறது! என் உணர்வுகள்.. ......?

# உங்கள் பார்வையில்

''இதயம்'' முதல் இதழே தரமான படைப்புக்களுடன் கன மாக வெளிவந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதே. தொடர்ந்தும் ஈழத் தின் தனித்துவத்தையும் தரத்தையும் பேணி வெளிவருமென்ற நம்பிக்கை வீண் போகாதென்றே நினைக்கின்றேன். தமிழில் இன்று புகுந்துள்ள நவ உருவங்களையும் ஏந்தி ''இதயம்'' வளரவேண்டு மென்பதே எனது ஆவலும், பிரார்த்தனையுமாகும்; வளர்க உங் கள் பணி.

திக்குவல்லை. — கமால்.

.. ...நல்ல முயற்சி, ஈழத்து இலக்கிய உலகிலே இப்போது ஒரு வித உத்வேகம் உண்டாகியிருக்கிறது. தேவையானதை, பயனுள் ளதை எழுத வேண்டுமென்ற எழுத்தாளர்களும் அவற்றினைத் தேடி வாங்கிப் படிக்க வேண்டுமென்ற வாசகர்களும் பெருகியிருக்கிறார் கள்...............உலகியல் வழக்கும் - புலநெறி வழக்கும் கொண்ட எழுத்து நடையும், யதார்த்தப் பிரக்ஞையும், தேவையும் - பய னும் கருதிய கண்ணோட்டமும் இணைந்த படைப்புக்களையே தரமா னவை எனக் கொள்ளலாம். இத்தகைய எண்ணக்குமிழ்களோடு ''இதயம்'' இலக்கியப் பணி புரிய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

புங்குடுதீவு-1. — ஈழத்துச் சிவானந்தன்.

''இதயம்'' ஈழத்துச் சஞ்சிகைகளின் இதயமாக விளங்குமென் பதில் கிஞ்சித்தேனும் ஐயமில்லை. மென்மேலும் சிறப்பான அம்சங் களை நல்ல முறையில் சித்தரித்து, புது மெருகுடன் எல்லோர் இத யங்களிலும் நீங்கா இடம்பிடித்துத் திகழ எம் இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.

மாவனெல்லை. — செல்வி. மும்தாஜ் அப்பாஸ்.

......இன்றைய யதார்த்த உலகில் இதயம் பேசுகிறது. அந்த இதயங்களின் அபிலாஷைகளையும், வாழ்வின் தாற்பரிய கருத்துக் களையும் ஒன்று திரட்டி ஈழத்தின் எழுத்தாளர்களால் சிருஷ்டிக்கப் பட்ட படைப்புக்களைத் தாங்கி மிளிரும் இதயம் கண்டேன். ''இத யம்'' வாழ வாழ்த்துகிறேன்.

யாழ்ப்பாணம். — பொன். சந்திரலிங்கம்.

......தமிழுக்கும், தமிழர்களுக்கும் ''இதயம்'' சீரிய பணி செய்து வெற்றி நடைபோட எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆள்கரனேயா. — வே. ஞானசுந்தரி.

......இனி வெளிவரும் இதழ்கள் இப்படியும், இன்னும் சிறந்த முறையிலும் வெளிவந்து என் போன்ற வாசகர்களை மகிழ்விக்க வேண்டுமென்பதே என் அவா........

கொழும்பு-9. — எஸ். ஏ, யூசுப்.

......இன்னும் பலருடைய இதயத்தையும் கவர்வதற்கு இதயம் மேலும் சிறந்த முறையில் பணியாற்றும் என எதிர்பார்க்கிறோம்.

யாழ்ப்பாணம். — மு. ஜெய்குமாரி.

......இதயம் ரொம்ப இதமாக இருக்கிறது. அடுத்த எங்கள் இதயத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

வல்லன். — ஆ. பஞ்சலிங்கம்.

......இதயம் இயங்கினால் தான் உயிர் உடல் இயங்கும். அது போல் தமிழ் இலக்கிய ஏடாம் எம் 'இதயம்' இயங்கினால் தான்" அதுவளர்ந்தால் தான்- ஈழத்தில் தமிழ் வளரும், ஈழத்து இளம் எழுத்தாளர்களின் ஆர்வம் வளரும், அவர்கள் ஆக்கங்கள் வளரும் என்பது உண்மையாகப் போகிறது.

— களுவஞ்சி நகர் - தனபாலன்.

......'இதயம்' தரமான இலக்கிய இதழாகப் பரிணமிக்கின்றது கண்டு பூரிப்படைகிறேன். தொடர்ந்தும் நேர்மையான முறையில் விடயங்களைத் தேர்ந்தெடுத்துப் பிரசுரம் செய்யும் என்றும் நம்புகி றேன்.

யாழ்ப்பாணம். — த. பரமலிங்கம்.

உங்கள் இந்த நல்முயற்சி தொடரட்டும்; அதற்கு, ஈழத்து மண் வாசனையை நுகரக் காத்திருக்கும் தரமான வாசகர்களும், ஈழத் துக் கலை, இலக்கிய வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் காட்டிவரும் எமது எழுத்தாளர்களும் நிச்சயம் முன்னின்றுதவுவர் என்பது நிச் சயம்.

நல்லூர் — பி. கனகரத்தினம்.

# THE PROFESSIONAL

ஐ, சாந்தன்



ஓவியம் சாது'

வெளிமுற்றத்திலிருந்து, 'படபட' வென்ற ஒலியுடன் கே. கே. யின் மோட்டார் சைக்கிள் புறப்பட்ட விதம், ஒரு தனிமை உணர்ச்சியை சச்சியின் மனதிற் கிளப்பி விட்டது, ஏற்கெனவே பரபரத்துத் தவித்துக்கொண்டிருந்த மனம் இப்போது இன்னும் பல வீனமாயிற்று!

'பாவிப்பயல், கே. கே, ...'- என்று மனம் திட்டும் போதே '.... அவன் என்ன செய்வான்!'- என்கிறநினைவுங்கூடவே வந்தது.

'இனி-?"

நெஞ்சுக்குள் ஏதோ அடைத்துவிட்டது போல, உடம்பெல்லாம் குளிர்ந்து விறைப்பதுபோல சச்சி உணர்ந்தான். மெதுவாய் அசைந்து. முகப் பவுடரின் கிறக்க நெடியையும் இன்னும் ஏதோ நறுமணங்களையுஞ் சுமந்து வருகிற காற்றுக்கும், அவனுக்கு வேண்டிய 'மூ'டைக் கொடுக்கிற சக்தியிருக்கவில்லை.

'ஏடு தொடங்குகிற' அன்றே, இப்படி அந்தரமா?!'

*இக்கதையின் தலைப்பைப் பார்த்துத் திகைத்து விடாதீர்கள்! இது ஒரு சிறு கதைதான். இந்தக் கதையை எழுதியிருக்கும் நண்பர் **ஐ. சாந்தன்** இதே தலைப்பில்தான் கதையை வெளியிட வேண்டும் என்று 'விடாப்பிடியாக' நிற்கிறார். அதனால் தான் இப்படி...!*

'எதையாவது சொல்லி விட்டு, நழுவிவிட்டா லென்ன?'

அடுத்த அறைக்குள் அலுமாரி திறக்கிற ஓசை கேட்டது.

'சே! விட்டு விட்டா? ... 'பாடம்', 'படிப்பு'? -...... காசு வேறு!'

அவன் குழம்பினான்.

'......அதுதான் போனாலும், இப்பிடியொரு சான்ஸ்!'

இவ்வளவு நாளும்-ஒருநாள், இரண்டு நாளா; பத்து வருடங்களிருக்குமா? இருக்கும்—எதற்காக ஏங்கிக் கிடந்தானோ; அது இன்று, இப்படிக் கையில் வந்து விழுந்திருக்கையில் விட்டு விட்டுப் போவதா!

'ஓ! அந்த சான்ஸ்! முதல் முதல்...'

சச்சிக்கு, உடம்பு புல்லரித்துத் திமிர்த்தது.

'விடுறேல்லை; பார்ப்பம்! என்ன பயம்?'

ஒரு மகிழ்ச்சி; பரபரப்பு.

பரபரப்பு.—!

புதியதாக ஒரு அனுபவங் கிடைக்கவிருக்கும்போது வருமே, அந்தப் பரபரப்பு!

கல்லூரியில் முதல் வருடம்-முதல்நாள் முதல் பாட நேரத்தில் இருந்ததே, அந்தப் பரபரப்பு...

கடந்த வருடம், வேலை கிடைத்து; முதல் முதல் அலுவலகத்திற்குப் போக பஸ்ஸுக்காகக் காத்து நின்றானே, அப்போது ஏற்பட்ட அதே பரபரப்பு ...

ராணியிடம் தன் காதலை வெளியிடுவதற்காக, அன்றொரு நாள் அவளுக்காகக் காத்திருந்தானே, அப்போதேற்பட்ட பரபரப்பு......

அவை போலத்தான் இதுவும்!

அதுவேதான்!—அவன் நிச்சயமாய் உணர்ந்தான்.

அது - அந்த உணர்ச்சி-விபரிக்கப் பட முடியாதது. புதிது; புதிய அநுபவம். முழுவதும் இன்பமாய், ஒரு புதிய வழியைக் காட்டும்!

ஓ! ஒரு புதிய பாடம்!

(எவ்வளவு நாள் காத்திருந்தான் ...)

சச்சிக்கு ஏனோ உடல் மெதுவாக நடுங்கிற்று. நன்றாகப் பின்னால் சாய்ந்தபடி கதிரையில் உட்கார்ந்திருந்தவன், முன்னால் சரிந்து முழங்கால்களில் கைகளை முட்டுக்கொடுத்து முகத்தை ஏந்தியபடி இருந்தான்.

அடுத்த அறைக்குள், ஏதோ ஒலிகள் கேட்டபடி இருந்தன. வேறெவரும், அந்த வீட்டில் இருப்பதாயே தெரியவில்லை;

எலிவளைமாதிரி நேரே நீண்டு உள்ளுக்குள் போகிற தாழ்வாரத்தின் அந்தப் பக்கம், அடுப்படியோ அல்லது வேறு அறைகளோ இருக்கலாம். அதற்குள் யாரேனும் இருப்பார்கள்.

''நல்ல 'அனெக்ஸ்' '' தொல்லையில்லாத— பிரத்தியேகத்தில் மற்றவர் தலையீடே இருக்கமுடியாத—அமைப்பு.

இந்த அறை. இதன் முன்னாலிருக்கிற விருந்தை, பின்னாலிருந்து ஒலி கிளப்புகிற அறை எங்கோ தாழ்வாரக் கோடியருகிலிருக்கக் கூடிய அடுப்படியும், குளியலறையும்... அருமையான இடம்.

கொழும்பிலென்றால், வாடகை இருநூற்றைம்பதற்கும் மேலேயே ஆகும். இங்கு, எழுபத்தைந்தே போதுமென்று நினைத்தான் அவன்.

அடுத்த அறையிலிருந்து, மெல்லிய இருமல் ஒலி கேட்டது. சச்சி, கைக்கடியாரத்தைப் பார்த்தான். ஐந்தே காலுக்கு மேலாகி விட்டது. சரியாக ஐந்து மணிக்கு, 'கே. கே. அவனை இங்கே அழைத்து வந்திருந்தான். 'கே. கே., இந் நேரம் அறைக்குப்போய்ச் சேர்ந்திருப்பான்... இங்கே ?'

விறைத்த உடம்பை நீட்டி முறுக்கி, சச்சி நெட்டி முறித்தான்.

'இது, சந்தோஷமான வேளை' — அவனுக்கு, முதலிலிருந்த பரபரப்பு பறந்தே விட்டது போல - சாதாரணமாகக் களத்தில் பொருத இறங்கும் வீரனைப்போல - ஒரு உணர்வு; வாயில் ஏதோ பாட்டுக்கூட வரப்பார்த்தது.

''ஸொறி...'' என்றபடி, அவள் திடீரென்று தோன்றினாள், சச்சி, ஏறிட்டுப்பார்த்தான்.

(பழைய பரபரப்பு!)

அந்தத் துணிவு, மகிழ்ச்சி- போய்விட்டன.

தயக்கம்... -மற்றது, பயமா? பரபரப்பு!

'அக்கா, இந்த நேரம் இராச்சாப்பாடு செய்து கொண்டிருப்பா. அத்தானும் பிள்ளைகளும், முன்னுக்கு விளையாடிக் கொண்டிருப்பினம்.... அக்கா!

அக்காவுக்கும் இந்தப் பெண்ணுக்கும் இதென்ன ஒற்றுமை?

அதே மேடிட்ட நெற்றி, மெல்லிய புருவம், கீழே வளைந்த நாசி.. ...உதடுகள் கூட ... !

(என்றாலும் —)

அக்காவல்ல இவள் !

அக்காவைப் போல, அதே மாதிரி அச்சொட்டாகவும் இவளில்லை.....

ஆனாலும், இவளைப் பார்த்தவுடன் அக்காவைத்தான் பார்த்தமாதிரி!

அதே முகவெட்டாலா? —அதிசயந்தான்!

முதல் தரம் இவளைக் கண்ட போது — அதாவது, கே. கே. காட்டியபோது அந்த முதல் பார்வையிலேயே இவ்வளவும் மனதில்பட, அவன் கே. கே. யிடம் தன் வியப்பை வெளிப் படுத்தினன்.

கே. கே. சிரித்தபடி ஒரு 'பகிடி' அடித்தான்.

"கொப்பர், இந்தப்பக்கமி ருந்தவரோ, முந்தி?"

—சச்சிக்கு இது இப்போது நினைவுக்கு வந்தது!

இவ்வளவு நினைவுகளும், எண்ணக் குழப்பங்களும் எழுந்த அந்த அரை நிமிட வேளைக்குள், அவள் மீண்டுஞ் சொன்னாள்.

"......ஸொறி..... லேட்டாகுதா? ஒரு நிமிஷம் — டீ கொண்டு வர்றன்......"

'வேண்டாம்; மிஸ் அக்னஸ்' என்று சச்சி சொன்னபோது, அவள் அங்கில்லை.

'தான் சொன்னது, தனக்கே கேட்டிருக்குமா?' என்று எண்ணினன், அவன்.

அவளைப் பார்க்க, அவனுக் குப் பாவமாக இருந்தது—அக் காவே இப்படி ஆகி விட்டது போல! அந்தரம்.

வலு பாடுபட்டு, அந்த நினைவைத் தூக்கியெறிந்தான்.

இங்கிருந்தபடியே, அவள் நடப்பதை அவன் பார்க்க முடிந்தது;

'கட்புலன், உடலை முறுக் கித் திமிரச் செய்யுமளவிற்கு ஒயிலாக நடந்தாள், அவள்!

அதனுல் 'அக்காவைப்போலிருந்தால், அக்காவா?' என்ற நினைவை மனங் கிளப்பி, சாதக மான ஒரு முடிவை எடுக்கச் செய்ய அவனைத் தூண்டிற்று......

'அக்காவைப் போலிருந் தால் அக்காவா?'

மனதை ஆற்ற முயன்றான். காத்திருக்கும் அந்த இன்ப நிமிடங்கள்...

அந்தத் தூண்டுதல்; அதன் விளைவுகள்; படிப்படியாய் முன் னேற்றம்......

செயற் தொடர்!

'ஓ...!' சிலிர்த்தது, சச்சிக்கு.

புத்தகங்களில் படித்தது; படங்களில் பார்த்தது; 'சொல் லக் கேள்வி — இவையெல்லாம் 'நிதர்சனமாகப் போகின்றன' என்கிற நினைவே இன்பத்தின் இன்பமாயிருந்தது.

சில 'பரிசோதனை'களும் செய்யவேண்டியிருந்தது, அவ னுக்கு! அதற்காகத்தானே, இதுவும்.

அதற்காகத்தானே, கே. கே. கூட்டியும் வந்தான்?

● ● ●

"டேய் முட்டாளாயிருக் காதே. இதெல்லாம் அறிவு. இதை, 'ஊத்தை'யாய் நினையா தே. இப்படியொரு 'வழிதுறை' தெரியாம எப்படி நீ வாழமுடி

யும்? இந்த அனுபவ அறிவு, உன்ர 'கேர்'ளுக்கு இருக்குமா?......

"நீதான் அவளுக்குக் குருவாக வேணும். ஆனு, உனக்கே ஒண்டுந் தெரியாமலிருந்தா என்ன செய்யிறது?......

"......மச்சான், இது பழுதில்லை; பிழையில்லை — பாடம்! உண்மையிலை அறிவியலாய்ப் படிக்கிறது.....டேய், 'ஸ்டியரிங்' கையே பிடியாதவனிட்டைப் புதுக்காரைக் கொடுத்து, 'ஓடிப் பார்' எண்டு சொல்லுறமாதிரி ......! கார்ப் படத்தைப் படங்களிலை பாத்தாமட்டும் போதுமோ?"

"நீ, இப்ப என்ன சொல்லுருய்?"

"பழகி, 'லைசென்ஸ்' எடு — எண்டு சொல்லுறன்"

கே. கே. சொன்னதில், பிழையொன்றுமிருப்பதாகப் படவில்லை, சச்சிக்கு. பிற்கால வாழ்வில் மிகமிக முக்கியமானதொரு பங்கை வகிக்கப் போகும் ஒரு விஷயத்தைப் பற்றிப் பூரண அறிவில்லாமல், புது வாழ்வைத் தொடங்க இருப்பது, எவ்வளவு பேதைமை!

அந்தக் குழந்தைப் பெண் ராணியுடன், அப்பாவி சச்சி... என்ன, குருட்டு வாழ்வா?

சில சந்தேகங்களிருந்தன, அவனுக்கு.

சில பயங்களிருந்தன.

அவற்றை நிவர்த்தி பண்ணுவதில் என்ன தப்பு?

'விஞ்ஞான ரீதியில் வாழ்வை அணுகுவதுதானே, இது?'

என்று சச்சி முடிவெடுத்தான்.

(ஒரு வைத்தியரிடம் போவது போல; உடற்கூறு நிபுணரிடங் கலந்தாலோசிப்பது போல......)

'பிழையென்ன?'

'ராணிக்குத் துரோகஞ் செய்கிறேனு? என்று மனம் ஒரு தரம் நினைத்தது. அடுத்த கணமே அந்நினைவு சுத்தப்பைத்தியக்காரத்தனமாய்ப் பட்டது.

'மனம் மாறி, வேண்டுமென்றே போவதுதான் துரோகம். எனக்கும் ராணிக்கும் இருக்கும் இணைப்பை வளர்க்கவே, எங்கள் வாழ்வைச் சரியாக வாழப்படிக்கவே, இதைச் செய்தால்— அதில் 'துரோகமென்ன'?

கே. கே. யிடம் முடிவைச் சொன்னபோது,

"பயப்படாதே.....எப்ப?" என்ருன்.

"அடுத்த போயா?" சச்சிக்குப் புதிய பயமொன்று படர்ந்தது.

"... டேய், கே. கே. எங்கையாவது 'பாழ்கிணற்'றிலை தள்ளி விட்டுடாதே" என்ற சச்சியைப் பார்த்து,

கே. கே. கேட்டான்:

"சச்சி, நான் உனக்கு நண்பனு, பகைவனு?"

கே. கே, யை. சச்சிக்குத் தெரியும். நேர் வழியில் - காலத்திற்கேற்ற புதுவழியில்-போகிறவன்,

இன்று நேற்று நட்பா?

"... சச்சி, பாண்கிணறில்லை, பயப்படாதே!"

சச்சிக்குத் துணிவு வந்தது. கே. கே, புத்திசாலி; உலகம்

அறிந்தவன். அவன் ஒன்று சொன்னால், பயப்படத் தேவையில்லை.

கே. கே. சொன்னதைச் செய்தான். போன திங்கட்கிழமை, சினிமாவில் மிஸ். அக்னஸை அறிமுகப்படுத்தினான். தனியார் நிறுவனமொன்றில் வேலையிலிருக்கிற தமிழ்ப் பெண்.

— சச்சிக்கு இவ்வளவுந்தான் அப்போது தெரிந்திருந்தது.

இன்று—இந்தப் போயா—ஐந்து மணிக்கு இங்கே வந்தாயிற்று. இவர்கள் வரும்போது, மிஸ். அக்னஸ் விருந்தாளிகளை எதிர்பார்த்திருந்தாள். கே.கே. ஏழரை மணிக்கு வருவதாய்ச் சொல்லி, உடனேயே போய்விட்டான்.

● ●

முன்னாலிருந்த மேசைமேல், தேநீர்த் தட்டம் வைக்கப்பட்டது. அக்னஸ் வந்துவிட்டாள். ஏறிட்டு முகத்தைப் பார்த்தபோது, அவள் விழிகளிலிருந்த அந்தக் குறும்பு, கவர்ச்சி .....

ஓ! அவை தூண்டிற் புழுக்களா?

(கண்கள், மீன்களாமே!)

சச்சிதான் மீன்!

ஏதேதோ கேட்டாள்; ஏதேதோ சொன்னான்.

சிரிப்பு, சிணுக்கம்;

புதிதுதான்; மென்மை-கிறக்கம்!

சச்சியின் மனத்தினுள் ஒன்றேதான் சுழன்றது:

'அக்காபோலிருந்தால், அக்காவா?'

தேநீர் குடித்தாயிற்று.

''இந்த அறையைப் பாருங்களேன்......''

அவன், எழுந்து பின்னால் போனான்.

பத்து வருட ஏக்கம், கனவுகள், பரிசோதனை. சந்தேகம், இன்பம் - படிப்படியாய்......

நிதர்சனம்!

அதனால் அவன் எழுந்து 'அறையைப் பார்க்கப்' போனான்.

'அக்கா போலிருந்தால், அக்காவா? ... ... ...... யாரோ. 'புரொபெஷனல்!'

'பார்க்கப்போன' அறைக்கு மூன்று சாளரங்கள் இருந்தும், மூன்றும் பூட்டியிருந்தன. அவள், மின்விளக்கைத் தட்டிவிட்டாள்.

அழகான அறை.

ஒலி கிளப்பிய அலுமாரி; ஒற்றைக் கட்டில்; மேசை, கதிரை; வேறேதோ, ஏதோ......

என்ன இருக்கிறது, பார்க்க?

அவள் திரும்பினாள்.

தூண்டிற் புழுக் கண்கள்......

விளக்கு எப்படி அணைந்தது?

மெல்லிய இருளில் கதவைச் சாத்த (—'அக்கா போலிருந்தால், அக்காவா; என்ன!—) சச்சி திரும்பியபோது அவளில் மோதிக் கொண்டான்

அணைப்பை மாற்றாமலே, உலகிலிருந்து தங்களைப் பிரித்து ..........

தங்களை ஒன்றாக்கி ....... ...

பாடம்! —தயக்கம் போயாயிற்று

'அக்கா போலிருந்தால், அக்காவா?'

கே. கே. வர நேரமிருக்கிறது! ●

# வெளிச்சவீடு கேள்வி பதில்

கே. ஸ்ரீதரன் எழுதுமட்டுவாள்

கேள்வி: வாழ்வு என்பது என்ன?

பதில்: மன உறுதி படைத்தவரின் சொர்க்கம்; மற்றவர்க்கு அது நரகம்.

பொ. சிவபாதசுந்தரம்,
களுத்துறை.

கே: இதயத்தின் மூலம் எதைச் சாதிக்க நினைக்கிறீர்கள்?

ப: ''இதைத்தான் சாதிக்கப் போகிறோம்'' என்று எதைப் பற்றியுமே தம்பட்டமடித்துக் கொள்ள 'இதயம்' விரும்பவில்லை. காலப்போக்கில் 'இதயம்' எதைச் சாதிக்கிறது என்பதை நீங்களே உணர்ந்து கொள்வீர்கள்.

'சிவா', புங்குடுதீவு.

கே. என்னைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: இதைத் தவிர வேறு கேள்விகளும் கேட்கத் தெரிந்தவர் என்று நினைக்கிறேன்.

என். இராசக்கோன்,
இரத்தினபுரி.

கே: உங்களுக்கு என்ன தெரியுமென்று 'வெளிச்சவீடு' பகுதியை ஆரம்பித்திருக்கிறீர்கள்?

ப: 'வெளிச்சவீடு' வழிகாட்டிதானே!

எஸ். உதயகுமார், மண்டைதீவு

கே: எனக்கு அழத் தெரியவில்லையே?

ப: இதே காரணத்தை வைத்துக் கொண்டே அழ ஆரம்பித்து விடுவீர்கள் போலிருக்கிறதே!

சோ. செல்வராஜா,
கொழும்பு-1.

கே: எனக்கு வாழவே பிடிக்கவில்லை?

ப: மிக்க மகிழ்ச்சி. அடுத்து என்ன செய்வதாக உத்தேசம்?

எம். எஸ். எம். பாரூக்,
மருதானை.

கே; இந்த உலகத்தில் அன்பு உருவாகாமலேயே இருந்திருந்தால்... ?

ப: மனித இனமே நிர்மூலமாகியிருக்கும்.

அ. பாலசுந்தரம்,
புங்குடுதீவு-9.

கே: ஏன்?

ப: இந்தக் கேள்வியினால்தான் இன்று உலகம் சிறந்து நிற்கிறது.

வை. வில்வரெத்தினம்,
பொரளை.

கே: துணிவு இருந்தால் மட்டும் போதுமா?

ப: இல்லை; மூளையும் கொஞ்சம் தேவை.

சு. யோகநாதன். புங்குடுதீவு.

கே: நினைப்பதெல்லாம் நடந்து விட்டால்...?

ப: இந்தக் கேள்வியை நீங்கள் என்னிடம் கேட்டிருக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது.

இ. வ. திருச்செல்வம்,
ஆனையிறவு.

கே: இலக்கியத்தின் பயன் என்ன?

ப: சமூக வளர்ச்சிக்கு உதவாத எந்தவொரு இலக்கியமும் பயனற்றதே.

என். தனபாலன், மகரகம.

கே: இதயம் 'வெறும்' இலக்கியப் பத்திரிகையா?

ப: மக்கள் சக்தியில் நம்பிக்கை வைத்துச் செயல் படும் 'இதயம்', மக்களை ஆற்றுப்படுத்த உதவும் அத்தனை துறைகளுக்கும் களம் அமைத்துக் கொடுப்பதில் சிறிதும் பின் வாங்காது.

செல்வி: கே. வசந்திரா,
கண்டி.

கே: வாழ்க்கைக்கு அத்தியாவசியமானது பணம் தானே?

ப: அத்தியாவசிய தேவைகளில் அதுவும் ஒன்று.

எம். எஸ். ஜாபீர்,
அக்கரைப்பற்று.

கே: இறைவனைப்பற்றி......?

ப: 'கேளுங்கள் தரப்படும்'

செல்வி: சாரதா திருச்செல்வம், சாவகச்சேரி.

கே: எது அழகு?

ப: நாம் செய்யும் ஒவ்வொரு நல்ல காரியமும்.

கே: சிரிக்கும்போது சிலருக்கு கண்களில் நீர் வருகிறதே?

ப: அடுத்து வரப்போகும் அழுகைக்கு ஒத்திகையோ!

---

வாசகர்களின் கேள்விகளுக்கேற்ற தொனியிலேயே இங்கு பதிலளிக்கப்படுகிறது; உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி.

வெளிச்சவீடு
"இதயம்"
15/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

---

அடுத்த இதழில்:

பிரபல சிங்கள எழுத்தாளர்
**மார்ட்டின் விக்கிரமசிங்ஹாவின்**
**'அடிமைகள்'** (வஹல்லு)
சிறுகதை இடம் பெறுகிறது.
தமிழில் தருபவர்: தம்பியையா தேவதாஸ்.

# அன்புள்ள வாசகருக்கு...

## வணக்கம்!

உங்களுடன் என் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவேண்டும் என்ற ஒரு எண்ணம் 'இதயம்' ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளிலேயே உருவானதொன்று, எனினும் இரண்டு இதழ்களை உங்கள் பார்வைக்கு அனுப்பிய பின்பே இந்த மடலை எழுதத் தொடங்கியிருக்கிறேன்.

இந்தப் பக்கத்தில் என் கருத்துக்களைச் சொல்வதுமட்டுமல்ல எனது நோக்கம்; உங்கள் கேள்விகளுக்கு — 'இதயம்' பற்றிய உங்கள் மன உளைச்சல்களுக்கு—விளக்கம் தரவேண்டிய பெரும் பொறுப்பும் எனக்குண்டு.

## 'இதயம்' தொடங்கப்பட்டது ஏன்?

இப்படிப் பலர் என்னைக் கேட்டார்கள்; "சீரிய இலக்கியப் பணி புரியவேண்டுமென்பதற்காகவே" என்று அவர்களுக்கெல்லாம் பதில் சொன்னேன். 'இப்படிச் சொன்னவர்கள் - பத்திரிகை நடத்திப் பார்த்தவர்கள் எத்தனையோ பேர் இன்று நடுத்தெருவில் நிற்கிறார்களே! உனக்குத் தெரியுமா தம்பி?" என்றும் சிலர் கேட்கத்தான் செய்தார்கள். "சரி அதற்காக......" என்று திருப்பிக் கேட்டேன். "பேசாமல் இந்தத் தொழிலை விட்டுப்போட்டு வேறு வேலையைப் பார். உருப்படுவாய்" என்று அக்கறையோடு சொன்னார்கள். ஒரு வகையில் இவர்களுக்கெல்லாம் நான் மிகக் கடமைப்பட்டவன்; இல்லையென்றால் மிகுந்த மன உறுதியோடு 'இதயத்'தை என்னால் உருவாக்க முடியாமலேயே போயிருக்கும்.

## பணம்தான் மூலதனமா?

'ஒரு பத்திரிகையின் வளர்ச்சிக்கு பணம்தான் மூலதனம்' என்பதில் உண்மையில்லையென்றே நான் கருதுகிறேன். பணம்தான் மூலதனமாக இருக்கமுடியுமென்றால் 'பல லட்சங்களுடன்' தொடங்கப்பட்ட பல சஞ்சிகைகள் இன்று எங்கே?

## இதயத்தின் மூலதனம் எவ்வளவு?

சொன்னால் நீங்கள் வியப்படைவீர்கள்; இந்தக் கேள்விக்கு நான் தரப்போகும் விடை சிலருக்கு நகைச்சுவையாகக் கூட இருக்கலாம்; ஆனால் உண்மை அதுதான்; இதயத்தின் மூலதனம்—

பல நூற்றுக் கணக்கான ரூபாய்கள் அல்ல; பல நூற்றுக்கணக்கான தூய இதயங்கள்; இன்று 'இதயம்' வளர்ந்துகொண்டிருப்பது மகேஸ்வரன் என்ற ஒரு இளைஞனால் மட்டுமல்ல; இதயத்தை வாழ்த்தியும், வரவேற்றும் ஆதரிக்கும் உங்களைப்போன்ற பலநூற்றுக் கணக்கான நல்ல இதயங்களால்தான்.

## 'இதயம்' எத்தனை காலம் வாழும்?

இப்படிக் கேட்பது பலருக்கு சர்வ சாதாரணமாகப் போய்விட்டது. ''ஒரு சந்தா எடுங்கள்'' என்று நான் கேட்டபோது பல நல்ல மனிதர்கள் இதே கேள்வியைத்தான் என்னிடம் கேட்டார்கள். அவர்களிடம் சந்தாப் பணம் பெற்றுக்கொள்வதுகூட எனக்கு சிரமம் தரவில்லை. ஆனால், 'இதயம்' தொடர்ந்தும் வரும் என்று நம்பிக்கையூட்டுவதில்தான் நான் மிகுந்த கஷ்டப்பட நேர்ந்தது.

அவர்களைக் குறைசொல்லக் காரணமில்லை; 'நொடிந்து'போன பல பத்திரிகைகளுக்குச் சந்தா கட்டி அனுத்துப் போனவர்கள் அவர்கள்; அதைத் தெரிந்து கொண்டபின்பும் அவர்கள்மீது குற்றம் காண இயலுமா?

'' 'இதயம்' எத்தனை காலம் வாழும்'' என்ற கேள்வியை - என் அன்புள்ள வாசகர்களே! நீங்களும் என்னைக் கேட்டால் —

அதற்கு என்னால் தரக்கூடிய ஒரே பதில் —

' 'இதயம்' எத்தனை காலம் வாழவேண்டும் என்று நீங்கள் ஆசைப்படுகிறீர்களோ அத்தனை காலம் 'இதயம்' வாழும்.'

## இதயம் எந்தக் கட்சி...?

எந்தக் கட்சியையும் சார்ந்து நிற்கவேண்டிய அவசியம் இதயத்திற்குக் கிடையவே கிடையாது. ஒருசில தரமான விமர்சனங்களுக்கு களம் அமைத்துத்தர 'இதயம்' விழைகிறதேயன்றி - எந்தக் கட்சியையும் 'புணர்ந்து' நிற்கவேண்டிய 'தலையெழுத்து' இதற்குக் கடுகளவேனும் இல்லை. இலக்கிய கர்த்தாக்கள் பலர், பல கட்சிகளையும் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதனால் அவர்கள் பெயரைப் பொறிக்கும் சஞ்சிகையும் அவர்களது கட்சியைச் சார்ந்ததாக இருக்கவேண்டு மென்ற நியதியா என்ன?

## இளம் எழுத்தாளர்களுக்கு

ஒரு அன்பு கலந்த வேண்டுகோள்: 'இதயம்' ஆரம்பித்து இரண்டு மாத காலத்துக்குள் ஏராளமான கதைகள், கவிதைகள், கட்டுரை

கள் போன்ற பல படைப்புக்கள் வந்து குவிந்து கிடக்கின்றன. இவைகளில் தரமானவைகளைத் தெரிந்தெடுத்து மாதாமாதம் வெளியிடவே செய்கிறோம். நீங்கள் அனுப்பிய கதையோ, கட்டுரையோ, கவிதையோ, தரமானதாக இருந்தால் நிச்சயமாக 'இதயத்'தில் அவைகளுக்கு இடமுண்டு என்று உறுதியளிக்க விரும்புகிறோம். எனவே. தொடர்ந்தும் தரமான படைப்புக்களை அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

## இறுதியாக—

உங்களிடம் நான் வேண்டிக்கொள்வது ஒன்றே ஒன்றுதான். உங்கள் ஆதரவால், இன்று உங்கள் கரங்களில் தவழ்ந்துகொண்டிருக்கும் உங்கள் "இதயம்" பற்றிய உங்கள் அபிப்பிராயங்களை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். "இதயம்" மேன்மேலும் வளர்ச்சியுறுவது உங்கள் எண்ணங்களாலேயே.

உங்கள் அன்பையும் ஆதரவையுமே 'இதயம்' வேண்டிநிற்கிறது. வணக்கம்.

அன்புடன்,
சிறீ மகேஸ்வரன்,
ஆசிரியர்

---

*அடுத்த இதழில்*

# உங்கள் கலைஞர்

(புதிய பகுதி)

**பிரபல கலைஞர் ஒருவரின் பேட்டி இடம்பெறுகிறது**

---

# இரண்டு கதைகள்:

— செ. வே. காசிநாதன்

(பேராதனைப் பல்கலைக் கழக தத்துவத் துறை விரிவுரையாளரும் தற்போது இங்கிலாந்தில் 'கலாநிதிப் பட்டப் படிப்பை மேற்கொண்டிருப்பவருமான செ. வே. கா, அவர்களின் கதைகள் தனித்துவமானவை. உள்ளடக்கமான தத்துவார்த்தம் இவர்கதைகளின் சிறப்பம்சமாதம், இலங்கைப் பல்கலைக்கழகவருடாந்த சஞ்சிகை 1965 - 1966 மாணவர் சங்க வெளியீட்டிலிருந்து நன்றியுடன் எடுத்துப் பிரசுரிக்கப்படுகிறது.)

## பூனையும் முட்டையும்

ஒரு பூனை இருந்தது. மிக அழகான கலகலப்பான பூனை. இந்தப் பூனை ஒருநாள் ஒரு முட்டையைச் சந்தித்தது. கண்டதுமே பூனைக்கு முட்டையிற் பிடித்துக்கொண்டது. முட்டையின் அடக்கமான உருவமும் அமெரிக்கையான சுபாவமும் அந்தப் பூனை மனத்தை ஒரேயடியாகக் கவர்ந்து விட்டன. இருவரும் இணைபிரியாத நண்பர்களாயினர். எப்போதும் ஒன்ருக உண்பதும் உறங்குவதும் விளையாடுவதும் அவர்களது வழக்கமாயிற்று. இந்த உலகத்து இன்பங்களையெல்லாம் தன்னேடு சேர்ந்து தனது நண்பனும் அனுபவிப்பதை நினைத்து நினைத்துப் பூனை பெருமகிழ்ச்சி எய்தியது.

'நல்ல காரியங்கள் இந்த உலகத்தில் நீடித்திருப்பதில்லை'

ஒருநாள் இந்தப் பூனையும் முட்டையும் பரணின்மீது விளையாடிக்கொண்டிருந்தன. அப்போது தற்செயலாக பூனையின் கை சற்றுப் பலமாக முட்டையின்மீது பட்டுவிடவே 'என்ன நடந்தது' என்று யாரும் உணர்வதற்குள் முட்டை உருண்டு கீழே விழுந்து 'டிச்' என்ற சப்தத்தோடு உடைந்தது. பரணிலிருந்த பூனை குனிந்து நோக்கியது. முட்டையும் நோக்கியது. முட்டை தனது அகன்ற ஒற்றை மஞ்சட் கண்ணுல் தன்னைக் குற்றம் சாட்டுவது பூனைக்குத் தெரிந்தது.

பூனையின் அன்பு நிறைந்த இதயத்தால் இந்த எண்ணத்தைத் தாங்க முடியவில்லை. அது அந்த இடத்தைவிட்டு ஓடிப்போயிற்று.

''பூனைகள் முட்டைகளோடு சேரக்கூடாது''

# "அகாரணம்"

அதிகாலையிலேயே எழுந்துவிட்டேன் அறைக்கு வெளியே வந்து பார்த்தேன். காலைப் பனி இன்னும் நன்ருகக் கலையவில்லை. மூட்டத்திற்கூடாகக் கட்டிடங்களின் கோடுகளும் மரங்களும் கலங்கலாகத் தெரிந்தன. அந்த மரங்களிடையே ஒரு மரத்திற்குக் கீழே ஒரு நாய்க்குட்டியும் - அதைக் குட்டி என்றும் சொல்லமுடியாது. குட்டிக்கும், முழு வளர்ச்சிக்கும் இடைப்பட்ட ஒரு மலர்ச்சிப் பருவம் - ஒரு காகமும் பனிக்கூடாக வந்துவிட்ட மஞ்சள் வெய்யிலில் அகப்பட்டுப் பொன்னிறமாகத் தெரிந்தன. நாய்க்குட்டி காகத்தைக் கலைப்பதும் காகம் சற்றே பறந்து பின்னர் வந்து அதனைச் சீண்டுவதும் அவற்றுக்கிடையே ஒரு விளையாட்டுப்போல நடந்துகொண்டிருந்ததைப் பார்க்க மனத்திற்குக் களிப்பாய் இருந்தது. நான் எனது அறைக்குட் சென்று எனது துவக்கை எடுத்துக்கொண்டு வந்து குறிபார்த்துச் சுட்டேன். தப்பவில்லை. நாய்க்குட்டி செத்துப்போயிற்று.


பாவியுங்கள்! மிகச் சிறந்ததையே பாவியுங்கள்!!

**அண்ணு கோப்பி**

லட்சக் கணக்கான மக்களின் பேராதரவைப் பெற்று
இலங்கையடங்கிலும்
நன்மதிப்புடன் விற்பனையாகும் ஒரேயொரு கோப்பி

**அண்ணு கோப்பி**

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:

**அண்ணு தொழிற்சாலை**
இணுவில்.

# அடுத்த அறைக்குள்ளே — ஒரு வருத்தக்காரப் பெட்டை!

'ஜெயா மகேஸ்வரன்'

இருமல்!

ஒரு தடவை... இரண்டு தடவை .. பதினைந்து தடவை .

'சீ! சனியன்'

''இப்பிடி இருமி இருமிச் சாகிறதைவிட ஒரேயடியாச் செத்துத் துலைச்சிற்ருத்தான் என்ன?'' புறுபுறுத்துக் கொள் கிறேன்.

கையில் விரித்து வைத்துக் கொண்டிருந்த 'இனிக்கும் காதல் கதை' புத்தகம் என்னைப் பார்த்து நகைக்கிறது.

அடுத்த அறையிலிருந்து இன்னும் இருமல் ஒலி ஓய வில்லை.

நான் ஒரு மடையன்.

இப்படியொரு வீட்டில் வாடகைக்கு 'ரூம்' எடுத்துக் கொண்டு பரீட்சைக்குப் படிக்க வந்தேனே. என்னைச் சொல்ல வேணும்'

வாசற்புறம் காலடியோசை கேட்கிறது. நிமிர்ந்து பார்க் கிறேன்.

அம்மா (என் அம்மா அல்ல-இருமிக் கொண்டிருக்கிருளே அவளுடைய-அம்மா!)

'என்னம்மா?'

எரிச்சலையடக்கிக் கொண்டு கேட்டு வைக்கிறேன். அவள் முகம் பரிதாபமாக இருக்கிறது. (இதுகளுக்கெல்லாம் என்ன பரிதாபம் பார்க்கிறது.)

'தம்பி... ஒரு உதவி செய்ய வேணும்.'

''சொல்லுங்க!'' என்கிறேன் (ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு.)

''உவள் புள்ளைக்கு இருமல் கூடிக் கொண்டுது. ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போக வேணும். என்னுலை நடக்க முடியேல்லை மோனை... அதனுலை...''

அவள் என்ன சொல்லவருகிருள் என்பது எனக்குப் புரிகிறது. ''அடுத்த அறைக்குள்ளை இருக்கிற அந்தப் பெட்டையையும் கூட்டிக் கொண்டு நான் ஆஸ்பத்திரிக்குப் போக வேணும்'.

புரிந்ததைக் கேட்கிறேன்.

'உனக்குப் புண்ணியம் கிடைக்கும்,' என்கிருள் அந்த அம்மா.

'நான் செய்த பாவங்களுக்குத்தானே இந்த அறையிலே குடிவந்திருக்கிறன். இனிப் புண்ணியம்தானே கிடைக்கும்.'

மறுத்துச் சொல்ல வாய் வரவில்லை.

'சரி, வரச் சொல்லுங்க!'

அவள் நன்றியுடன் பார்த்து விட்டுப் போகிருள்.

நான் என்னைச் சீர்படுத்துகிறேன்.

நானும்-அந்தப் பெட்டையுமாகப் புறப்பட்டு விட்டோம். வழி நெடுகிலும் ...இருமல். இருமல்,... முனகல்... இருமல்...

எனக்கு எரிச்சலாக வருகிறது.

''இவளின்ரை வயசிலே எத்தனை பெட்டைகள்— எவ்வளவு அழகாக, தங்கச் சிலைகள் மாதிரி. .....இது... இது ஒரு சனியன். என்ன பாவம் செய்து வந்து பிறந்துதோ?''

அவளைப்பார்க்கவே பிடிக்கவில்லை. பார்வையைத் தெருவில் பரவவிட்டவாறு வேகமாக நடக்கிறேன்.

அவள் மெதுவாக, மிக... மிக மெதுவாக நடந்து கொண்டிருக்கிருள்.

''கெதியிலே வா'' சூடாகச் சொல்லி விட்டு நடக்கிறேன். அவள் நடையில் இப்போதும் துரிதமில்லை. பழைய, அதே ஆமை வேகம்.

எனக்குக் கோபம் ஏறிப் போகிறது.

''டிகிரி'க் கணக்கில் சொல்வதானுல், 'நைன்ரி நைன்'

''எனக்கு வேறை வேலையே கிடையாதா என்ன?''

அவள் கண்கள் கலங்குவது தெரிகிறது.

''அம்மா கேட்டபோதே சொல்லியிருக்கலாமே?''

''சொல்லியிருக்கலாம் தான்!''

''ஏன் சொல்லவில்லை?'' கேள்வியுடன் இருமலும் கலக்கிறது.

ஒரு தடவை தெருவை நோட்டம் விடுகிறேன்.

யாருமே இல்லை. அவளருகே நெருங்கி நடக்கிறேன்.

''என்ன கேட்டாய்?''

''நீங்கள் என்னோடு வர முடியாது என்று என் அம்மாவிடம் சொல்லியிருக்கலாமே! ஏன் சொல்லவில்லை என்று கேட்கிறேன்?''

ஆள் காட்டி விரலால், என் கீழுதட்டை ஒரு தடவை வருடி விட்டுக் கொள்கிறேன்.

''அப்படி நான் சொல்லியிருக்கலாம் தானே? ஏன் சொல்லவில்லை?'

அவள் கேட்ட அதே கேள்வியை என்னுள் நானே கேட்டுக் கொள்கிறேன்.

''ஏன் சொல்லவில்லை?''

''ஏன் சொல்லவில்லை?''

''என்ன? பதிலையே காணேம்!'' அவள் கேட்கிருள்.

''அப்படிச் சொல்ல எனக்கு மனம் வரவில்லை இந்திரா.''

'இப்படி வெறுப்புக் காட்ட மட்டும் மனம் வருகிறதோ?'' அவள் குரலில் ஏளனம்,

"அந்த உரிமை கூட எனக்கில்லையா?"

அவள் என் முகத்தையே பார்க்கிறாள்.

"எந்த உரிமையை யார் இல்லையென்று சொன்னார்கள்?"

அவள் குரல் தழுதழுக்கிறது

தவறு என்மீதுதானா? சகல உரிமைகளையும் அவள் தந்துவிட்ட பின்பும் 'வெறுத்து' நடப்பது நான் தானே!

'தவறுதானா?'

அது எப்படித் தவறாகும்!

நான் வெறுப்பது உண்மைதான்.

ஆனால், இந்திராவையல்ல, அவளுடைய இருமலைத்தான்.

என் உயிரானவளை, என் இனிக்கும் நினைவுகளானவளை என்றால் வெறுக்க முடியுமா?

நான் வெறுப்பேனா?

அப்படி வெறுத்தால் பிறகு நான் என்ன காதலன்! இந்திராவின் அருகில்தான் இப்போதும் நடக்கிறேன். அவள் இருமிக் கொண்டுதான் வருகிறாள்

எனக்கும் எரிச்சல் வரத்தான் செய்கிறது.

இருமல் .. முனகல்... இருமல்...

இந்திராவைவிட்டு இனி நான் விலகமாட்டேன்: ●

சுகாதார முறையில்,

சுவைமிகுந்த உணவு பெற வாருங்கள்!

ராஜா போசனசாலை

ஆடியபாதம் வீதி,

நல்லூர் சந்தை, நல்லூர்.

## விமர்சியுங்கள்:

சாதாரண வாசகர்களை இலக்கியத் தரமுள்ள வாசகர்களாக்கும் நோக்கோடு 'இதயம்' ஒரு திட்டத்தை வாசகர்களிடம் சமர்ப்பிக்கிறது.

அத்திட்டம் இதுதான்:

இத்தோடு 'இதயம்' மூன்று இதழ்கள் வெளி வந்து விட்டன. இம்மூன்று இதழ்களிலும் வெளிவந்த படைப்புகளை வாசகர்கள விமர்சனம் செய்து அனுப்பவேண்டும். அவற்றுள் தரமான ஒன்றைத் தேர்ந்தெடுத்து ரூபா ஐந்து பரிசளிப்பதோடு, வேறு தரமான சில விமர்சனங்களும் பிரசுரத்துக்கென தேர்ந்தெடுக்கப் படும். ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் வாசகர்கள் இதில் கலந்து கொள்ளுமாறு வேண்டு கிறோம்.

விமர்சனம் என்ற பேரில் வெறும் பாராட்டுரைகள் வேண்டப்படா படைப்புகளைப் பற்றிய குறை, நிறைகளை மனம் விட்டு விமர்சிப்ப தோடு 'இதயத்'தில் இடம் பெறவேண்டிய படைப்புகளைப் பற்றிய ஆலோசனைகளும் வர வேற்கப்படும். விமர்சியுங்கள்.

உங்கள் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

'விமர்சியுங்கள்'
"இதயம்"
15/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: சி. மகேஸ்வரன்,
15/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

EDHAYAM June 1971

"இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்;
'இது எனதே'ன்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்."

# இதயம்

கலை, இலக்கியத் திங்கள் இதழ்.

துடிப்பு—1 எண்ணம்—3

— மாதம் ஒரு முறை மலரும் 'இதயம்' —

அலுவலகம்:
15/1, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

இந்த இதயத்தில்
இவர்கள் எழுதுகிறார்கள்.

ஐ. சாந்தன்
மு. தளையசிங்கம்
'யாழ். கலட்டியான்'
திக்குவல்லை கமால்
செ. வே. கா.
'ஷெல்லிதாசன்'
மு. நேமிநாதன்
எம். எஸ். எம். ஜின்னா
ஜெயா மகேஸ்வரன்
நந்தினி முத்துக்குமாரு
'இளந்தீவகன்'

கதை, கவிதைகள் அனைத்தும் கற்பனையே. கட்டுரைகளின் கருத்துக்களுக்கு அவற்றின் படைப்பாளிகளே பொறுப்பாளர்கள்.